
# தமிழ் மகள்

அன்பு அறம் ஆளுமை




இலவசம்

இது ஒரு ஆதி அருள் நெறி மன்ற வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசியத்தலைவர் புலிகளின் குரல் வானொலியில் கலைஞர்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து......**



சிங்கள இனவாத அரசு எமக்கு எதிராக ஒரு ஆயுதப் போரை மட்டும் நடத்தவில்லை ஒரு கருத்துப் போரையும் நடத்தி வருகிறது. உண்மையை மறைத்து பொய்களைப் புனைந்து மக்களை குழப்பும் நோக்கில் இந்த பரப்புரைப் போர் நடத்தப்பட்டு வருகின்றது. சிங்கள தேசத்தின் சகல மக்கள் தொடர்புச் சாதனங்களும் இந்தப் பரப்புரைப் போரை முன் எடுப்பதில் மும்முரமாக செயல்பட்டு வருகின்றன என்பதை நீங்களும் அறிவீர்கள். தமிழீழ மக்களின் தேச விடுதலைப் போருக்கு களங்கம் ஏற்படுத்தி போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்வதே இந்த கருத்து போரின் கபட நோக்கம். இப்படியான ஒரு சூழலில் எமது தகவல் ஊடகங்களின் பணி முக்கியமானது.

**- மாசி 1998 ஒளி வீச்சு**


பிரபல பல்லுப் பரிகாரியின் நிர்வாகத்தின் கீழ்

**KENNEDY & FINCH**

**DENTAL OFFICE**

For Appointment Call

**TEL: (416) 335-6724**

**3852 FINCH AVE. EAST, SUITE 304**

**SCARBOROUGH, ONTARIO MIT 3T9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மகள்

பூப்பு 1 மூப்பு 18

அன்பை வளர்ப்போம். அறத்தைப் பேணுவோம். ஆளுமையை முழுமையாக்குவோம்



பிரதம ஆசிரியர்
ஆதி மாதவன்

துணை ஆசிரியர்கள்
எஸ். எம். தனபாலன்
திருமதி. கலாநிதி குலமோகன்

வெளியீடு
ஆதி அருள் நெறி
மன்றம்
கனடா

பதிப்பாளர்
மீனா

முகவரி
2155 Lawrence Ave. E.
Suite 11
Scarborough, Ontario
M1L 4J5

விநியோகம்
காரை. கனக.சிவகுமாரன்
மன்னார். அமிர்த முருகதாசன்

மாத இதழ் - 18


கனடா வாழ் தமிழ் மக்களே! வணக்கம்! நலந்தானே?

வாழ்க! வளர்க! வளம் பெறுக!

ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் என்பது ஒரு உதாரண மொழியே. உவமானம் ஒரு புடை ஒப்பு என்பது தமிழ் இலக்கணம். அதாவது உதாரணமாகச் சொல்லப்படுவது சொற்ப உண்மைகள், மற்ற உண்மைகளைப் பாதித்துவிடாது சமூகத்தில் ஒரு சிலரின் வக்கரித்த போக்குகள் அச்சமூகத்தை கெடுத்துவிடவும் வழி உண்டுதான். அதற்காக நாம் சும்மாய் இருப்பதோ வேறு திசைகளை நோக்குவதோ நல்லதல்ல. இக்கரைக்கு அக்கரை பச்சையாகவும் தெரியும். கானலை நீர் என்று நினைக்கலாம். குடிக்கலாமோ?

ஒரு பல்கலாச்சார நாட்டில் பிற மொழி அறிவு பிற இனத்தவரோடு நட்பு தொடர்பு முதலியவை முக்கிய தேவைகளாகும். சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்ற கவிஞன் பாரதியின் பாட்டில் உச்சமும் ஒப்புரவு வாழ்வின் உயிர்ப்பும் தெரிகிறது. மரங்கள் வளர மண்ணோடும் உறவு தேவை. விண்ணோடும் உறவு தேவை அதுபோல் இனம் வளர தாய்மொழி உறவும் தேவை. பிறமொழிப் பயிற்சியும் தேவை என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறியது தமிழ் இனத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் வேண்டிய அறிவுரையாகும்.

பிறரைக் குறைகூறுவதும் இழித்தும் பழித்தும் பேசுவதும் பிறர் வாழ்க்கையையே கவனித்துக் கொண்டிருப்பதுவும், பிறருடைய மதிப்பு மரியாதையை மழுங்கடிக்க நாளும் பொழுதும் யோசித்து கருமமாற்றுபவர்களும், எதிர்கால சந்ததியினரின் அருவருப்புக்குரிய அம்சங்கள் தான். இந்தக் கீழ்மைகளை நமது புதிய பரம்பரை யினருக்கு விளங்கவைத்தாலே போதும். அவர்கள் நம்மைவிட விவேகிகள். விலக்க வேண்டியதை விலக்கி, கலக்க வேண்டியவர்களோடு கலந்து விடுவார்கள். இவற்றிற்கெல்லாம் நாம் பொறுமையோடு நமது சமய, தமிழ் பக்கங்களை பக்குவமாக அவர்களுக்குப் பருக்கி விடவேண்டும்.

அவர்கள் நஞ்சை அகற்றுவார்கள். அமுதத்தை உண்பார்கள். நமது பாரம்பரிய நீரோட்டத்தைப் பேணி ஓடவிடும் தகுதியும் பொறுப்பும் பெறுவார்கள். தமிழ்மகள் அவர்களுக்கு தாயாய் நின்று வழிகாட்டுவாள். மற்றவை இறைவன் சித்தப்படியே..........!

15-10-98 பிரதம ஆசிரியர்

**முகப்பில்**

*அமரர் சிந்தனைச் சிற்பி சித்ரா மணாளன் அவர்கள்*

வாக்குமூலம்: இவ்விதழில் வெளியாகும் ஆக்கங்களுக்கு அவற்றினை ஆக்கியவர்களே பொறுப்பாவர் என்பது தமிழ் மகளின் வாக்குமூலம் - பிரதம ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதிரா மணாளனின் ஆவி உலா!

புலவர் ஈழத்துச் சிவானந்தன்

நான் என்ன செய்ய? நினைத்தது ஒன்று நடந்தது வேறு. சந்தோஷமிகுதியிலும் சாவு வருமா? வரும். என் அனுபவம் இது. எத்தனை திட்டங்கள் போட்டிருந்தேன். என் முதல் முயற்சி தந்த திருப்தி பல வேலைகளைச் செய்யத் தூண்டியது. அந்த உற்சாக உசாரினால் பலரோடு அடிக்கடி தொலைபேசியில் பேசினேன். அடுத்தது என்ன? அடுத்தது என்ன? என்று அவர்கள் கேட்காமலேயே நான் அடுக்கடுக்காகச் சொன்னேன்.

எனக்கு உடல் நலக்குறைவு இருந்தது. உண்மைதான். ஆனால் மனநலக்குறைவு எனக்கு இருந்ததில்லை. நான் வணங்கிய கடவுளும் எனக்கு வழிகாட்டியவரும் அக்குறைவராமல் தடுத்தனர். மனம் பூரணப்படுவது உடம்புக்குப் பிடிக்காதோ? ஒன்றின் வளர்ச்சி ஒன்றுக்கு ஒவ்வாமையா? யார் கண்டார்? நமது மனிதர்களைப் போலத்தான் மனமும் உடம்பு மாக்கும். மனத்தையும் உடம்பையும் ஒற்றுமையாக்க முடியாமல் பலர் திண்டாடுவதும் உண்டுதான். உடம்பைத் தன்வசமாக்கி தனது பாதைக்கு இழுத்துப் போகும் மனங்களும், மனத்தை தன் விருப்பத்திற்கு இசையவைத்துக் கூட்டிக் கொண்டு போகும் உடம்பு களும் தாமும் கெட்டு சமுதாயத்தையும் கெடுக்கின்றன. இவ்விருவர் போராட்டமும் எப்பொழுது நிற்கின்றதோ அன்றுதான் உலகப் போராட்டங்களும் நிற்கும். தியானம் ஞானம் என்பவை என்று பரவலாகுமோ அன்றே சஞ்சலங்கள், சபலங்கள், அவலங்கள் ஒடுங்கிய தெய்வீகவாழ்வு மலரும். இதுபற்றியெல்லாம் இயம் பினார்கள் சான்றோர்களும் பெரியோர்களும். அவர்களை யார் மதித்தார்கள்? கணக்கில் எடுத்தார்கள். அவர்கள் சொன்னவை எல்லாம் காற்றில் கரைந்தது தான் கண்ட பலன்.

நான் வீட்டுக் கதிரையில் இருந்து யோசிப்பதுபோல் இப்பொழுது ஆவி உருவத்தில் நின்றும் சிந்திக்கிறேனா? என்ன செய்வது? பழகிய தோஷம் பரலோகம் மட்டும் வரும் என்று புலவர் சொன்னது உண்மைதான். ஒரு வியப்பான செய்தியையும் நான் சொல்லத்தான் வேண்டும். மதுரை ஆதீனத்தின் 291வது குருமகா சந்திதானம் சீலத்திரு சோமசுந்தர ஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள் எழுதிய ஆவி உலக ஆராய்ச்சி என்னும் நூலை ஆதாரம் காட்டி புலவர் அவ்வப்போது கூறியவற்றையெல்லாம் நேரிலேயே காண்கிறேன். ஆச்சரியமாய் இருக்கிறது. பூலோகத்தில் ஒரு மனிதன் எப்படி வாழ்ந்தானோ அப்படியே அவன் இறந்தபின்பும் வாழ்வான். நல்லவனாய் வாழ்ந்தவன் நல்ல ஆவியாகவும் கெட்டவனாய் வாழ்ந்தவன் கெட்ட ஆவியாகவும் உலவித்திரிவதை நான் இப்பொழுது பார்க்கும் ஆவி உலகத்தில் காண்கிறேன். ஒவ்வொரு வரையும் பார்க்க சிரிப்பாய் இருக்கிறது. பூலோகத்தில் புத்தி சொன்னவர்கள் இங்கும் புத்தி சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். பூலோகத்தில் கத்தி கொண்டு திரிந்தவர்கள் இங்கும் கையில் கத்தி போன்ற ஒன்றைக் காவிக்கொண்டு திரிகிறார்கள். வேடிக்கை என்ன வென்றால் அந்தக்கத்தி போல் இந்தக்கத்தி வேலை செய்யாதாம். இது இவர்களுக்குரிய தண்டனையாம்.

நல்லவர்களுடைய ஆவிகள் சந்தோஷமாகவே திரிகின்றன. கெட்டவர்களுடைய ஆவிகள் ஒருவித சோகத்தோடு உலவுகின்றன. நல்ல ஆவிகளின் சற்சங்கத்தில் அவையும் வந்து நிற்கின்றன. பூலோகத்தில் இதையெல்லாம் கேட்டுநடந்திருந்தால் நாங்களும் சற்சங்க சபையில் சந்தோஷத்தோடு இருந்திருப்போம் என்று அவை கவலையோடு முணுமுணுப்பதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. தமக்கு இனியென்ன பிறப்பு தரப்படுமோ என்ற ஏக்கமே அவர்களின் அன்றாடப் பேச்சாய் உள்ளது.

என் கதையை இடையில் விட்டுவிட்டேனா? சொல்கிறேன். நான் வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்பியதும் பலரோடு கதைக்கவேயிருந்தேன். வேலை இடத்தில் என் வியாதி என்னை திக்குமுக்காட வைத்துவிட்டது. கணநேரத்தில் நான் சாகப்போகிறேன் என்பதை உணர்ந்தேன். என் மனைவி பிள்ளைகளோடு கடைசி வார்த்தையாவது பேசமுடியுமா என்று தவித்தேன். என் உணர்வுகள் ஒருபக்கமாய் அலை மோதியபோது உயிர் என் உடலைவிட்டுப் பிரிவதைக் கவனித்தேன். இனிச்செய்வதற்கு ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்ததும் சிவசிவா என்று சத்தம்போட்டுச் சொன்னதாக நினைக்கிறேன். என் சத்தம் வெளியில் கேட்டதோ இல்லையோ என் உயிர் வெளியேறிவிட்டது. உற்றார் ஆருளரோ உயிர்கொண்டு போம்பொழுது என்ற பாடல் உணர்வில் கசிந்து கரைந்தது.

நான் ஆவி உருவத்தில் உலவுவதற்கு அனுமதிக்கப் பட்டேன். கடவுளின் அரசாங்கம் மிகநன்றாகவும் வேகமாகவும் நடைபெறுகிறது. பூலோகத்திலிருந்து வந்தவர்களுக்கு விசாரணை தண்டனை குடியிருப்பு மறுபிறப்பு எல்லாம் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்ட காரியாலயங்களில் நடைபெறுவதைக் கண்டேன். இறந்தவர்கள் உடனே விசாரிக்கப்படுவதில்லை. அவர்கள் சுதந்திரமாக முப்பத்தொரு நாட்கள் தேவலோகத்திலும் பூலேகத்திலும் ஆவி உருவத்தில் உலவலாம். பூலோகத்தில் உலவுகின்றபோது பழகியவர்களுக்கப் பக்கத்தில் நிற்கலாம். பேச ஆசையாய் இருக்கும் ஆனால் பேச்சு வராது. அவர்களைத் தொடலாம் அது அவர்களுககுத் தெரியாது. பெயர் சொல்லிக் கூப்பிடலாம் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குக் கேட்காது.

நான் சித்ராவைக் கூப்பிட்டபோது அவள் என்னைக் கூப்பிட்டு அழுதாளே தவிர நான் பக்கத்தில் நின்று கூப்பிட்டது அவளுக்கு கேட்கவேயில்லை. மகள் அனுவின் முதுகில் தட்டினேன் அவளுக்கு அது தெரியவில்லை. என்னை நினைத்து கலங்கியபடி நின்றாள். மகன் ஜெயாவின் காதுக்குள் தம்பி என்றேன். அவன் தாய் அழுவதைப் பார்த்தபடியே நின்றான். என் முயற்சி பலிதமாகாது என்பது தெரியும் தான். இருந்தும் ஆன்மாவின் ஆதங்கம் என்னை அலைக்கழித்தது.

மேல் உலகத்தை சொர்க்கம் என்று சொல்லுவார்களே! நல்ல பொருள் பொதிந்த சொல் அது. அங்கும் இங்குமாக நான் உலவிப்பார்த்ததில் அதற்கும் இதற்கும் பெரிய வித்தியாசம் இருப்பதைப் புரிந்து கொண்டேன். பூலோகத்திலும் சொர்க்க லோகங்கள் உண்டு என்று சொல்லுவார்கள். அது சரியான கணிப்பல்ல. சொர்க்கலோகத்தில்தான் சொர்க்க சுகங்கள் என்பன நூற்றுக்கு நூறு வீதம் கிடைக்கின்றன. எல்லோரும் ஒரே சிந்தையராய் ஒரே மகிழ்வினராய் இருப்பது சொர்க்கலோகத்தில்தான். பூலோக சொர்க்கங்களில் எல்லோரும் ஒரே சிந்தையராய், மகிழ்வினராய் இருக்க முடிவதில்லை. அது அதற்குரிய முறை. இது இதற்குரிய முறை. சொர்க்கத்தில் நீண்டநாட்கள் இருப்பவர்களும் உண்டு. சில நாட்கள், மாதங்கள், ஆண்டுகளால் பிறப்பெடுத்துப் போகிறவர்களும், வேறு வேறு இடங்களுக்கு மாற்றலாகிப் போகிறவர்கள் என்று பல தரத்தினர் உலவுகிறார்கள்.

நான் இங்கு வந்ததும் எனக்குத் தெரிந்தவர்கள் யாரையாவது காண ஆசைப்பட்டேன். இங்கு என்னை அழைத்து வந்த தேவனிடம் என் ஐயாவையும், மகேந்திரண்ணையையும் பார்க்கலாமா என்று கேட்டேன். அவன் ஒரு திசையைக் காட்டினான். திரும்பிப் பார்த்தேன் ஐயாவும், மகேந்திரண்ணையும் ஒரு பூங்காவில் இருந்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். முகங்கள் மட்டுமே தெரிந்தன. உருவங்களைக் காணவில்லை. நான் என் உருவத்தோடு நின்றேன். அவர்கள் தங்கள் உருவங்களை இழந்து நின்றார்கள். தேவனிடம் விளக்கம் கேட்டேன். உன் உருவம் அவர்களுக்குத் தெரியாததும் அவர்கள் உருவம் உனக்குத் தெரியாததும் இங்குள்ள விதி என்றான். என்னைக் கண்டதும் அவர்கள் ஆச்சரியப்பட்டதாய் தெரியவில்லை. நான் பக்கத்தில் போய் நின்றேன். அவர்கள் சும்மா சிரித்தார்கள். அவ்வளவுதான். நீ இங்கு வரப்போகிறாய் என்று நாங்கள் முன்பே கேள்விப்பட்டோம் என்று மகேந்திரன் அண்ணை மிகச் சாதாரணமாகச் சொன்னார். ஐயா அதற்கு தலை அசைத்தார். வேறு எந்த உணர்ச்சியையும் நான் அவர்களில் காணவில்லை. நான் பூலோகத்தில் இருந்த பொழுது கதைத்த மாதிரியே கதைத்தேன். அவர்கள் புன்முறுவலோடு கேட்டார்களே தவிர எந்தவித அங்கலாய்ப்போ அவசரமோ ஆதங்கமோ தெரியவில்லை. ஒரு கட்டத்தில் என்ன நீங்கள் மாறிவிட்டீர்களா? பூலோகத்தையே மறந்து விட்டீர்களா? என்று கேட்டேன். நீயும் மாறுவாய் ஆனால் பூலோகத்தை மறக்கமாட்டாய் எங்களைப்போல என்றார் அண்ணர். நீங்கள் மறுபிறப்பு எடுத்திருப்பீர்கள் என்று நினைத்தேன் என அண்ணனைப் பார்த்துச் சொன்னேன். மறு பிறப்பு எனக்கு மனிதப்பிறப்புத்தான் என்ற தீர்ப்பு வந்திருக்கிறது. நான் என் மகளின் வயிற்றில் பிறக்க வேண்டுமென்று வேண்டி விண்ணப்பித்தேன். கொஞ்சக்காலம் எடுக்கும் என்றார்கள். அதுவரை இங்கேயே இருக்க அனுமதித்தார்கள். இருக்கிறேன் என்றார் அவர்.

எனக்கு என்பிள்ளைகளைப் பார்க்கவேண்டும்போல் இருந்தது. உடனே பூலோகத்திற்கு வந்தேன். என் உடம்பினை வைத்திருக்கும் மண்டபத்துக்குள் போனேன். எல்லோரையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். ஒவ்வொருவருடைய மன நிலையையும் புரியக் கூடியதாய் இருந்தது. நான் என் இயல்புப்படியே அசைந்து அசைந்து அனைவரையும் கவனித்தேன். நான் உயிரோடு இருந்த பொழுது ஒரு மாதிரி நடந்து கொண்டவர்களும், என் வளர்ச்சியை விரும்பாதவர்களும், என்வளர்ச்சியையும் வாழ்வையும் பாராட்டியவர்களும், புறஞ்சொல்லித் தூற்றிய நஞ்சு நெஞ்சினரும், அகங்குழைந்து பாராட்டி மகிழ்ந்த அமுத இதயங்கொண்டோரும் வித்தியாசம் காட்டாத சோகத்தோடு இருந்தார்கள். மனிதருள் எத்தனை மாற்றங்கள். பொய்முகங்களும், மெய்முகங்களும் அழுமுகங்களாகி ஒரே சோகமயமாகிக் காட்சி தந்தன. அவர்கள் மன உணர்வுகளைக் கணக்கெடுக்க விரும்பினேன். கட்டுரை எழுதவல்ல கடவுளுக்குச் சொல்ல.

என்தோளில் ஒரு கைபட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். கடவுளாக்குமென்று கவனித்தேன். என்னை இங்கிருந்து கூட்டிக் கொண்டு போன தேவன் நின்றான். என்ன என்று கேட்டேன். விஜயதசமி முடிந்து அம்பாள் சிவனோடு சேர்ந்து மகிழ்ந்து ஆடுகின்ற நாயகிநர்த்தனம் கைலாசத்தில் நடக்கப்போகிறது பார்க்கப்போகிறாயா என்று கேட்டான். அதனைப் பின்பு எப்போ பார்க்கலாம் என்று கேட்டேன். அடுத்த ஆண்டு விஜயதசமிக்குப் பின்பு என்றான். முப்பத்தொரு நாட்கள் பூலோகத்திற்கு வந்து போகும் அனுமதி நினைவுக்கு வந்தது. நான் அவனுடன் சேர்ந்து அங்கு போய்விட்டேன். (உலவும்)

CANADIAN TRAVEL SERVICE

One and only one choice and Excellence in servioce

2425 Eglinton Ave. East, Unit 6A
Scarborough, Ont. M1K 5G8

Tel: (416) 285-7200 Fax: (416) 285-6233
E-mail: canex@attcanada.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்ரா மணாளன் என்னும் 'ஸ்ரீ'

## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

எங்கள் "தமிழ் மகள்" இதழின் துணையாசிரியராக எனக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இளைஞரே சித்ரா மணாளன் அவர்கள். இவர் எழுதும் ஆக்கங்களால் என் மனத்தைக் கவர்ந்த மனிதரானார். தமிழ் இயலுக்குரிய இன்சொல்லும், பணிவும், இதய சுத்தமும், இணங்கிப்போகும் இயல்பும் இவரை மேலும் நேசிக்க வைத்தன.

இவருடைய கட்டுரைகள், வானொலி மேடைப் பேச்சுக்கள் அனைத்தும் ஓர் அர்ப்பணிப்பு உணர்வோடு வெளிவந்தன. தமிழ் மக்களின் விடுதலை, சுதந்திரம், சுயாதிபத்தியம் முதலியவற்றில் அதிக கவனம் செலுத்தியவர். அவற்றின் அடிப்படையிலேயே சிந்தித்துச் செயல்பட்டவர். தடம் புரளாத இவருடைய தமிழின மேம்பாட்டு எண்ணங்கள் எழுத்து வடிவம் பெறும்போது பலருடைய உணர்ச்சிகளைத் தூண்டியிருக்கின்றன. ஒரு எழுத்தாளன் பேசுவதை பிறர்வியந்து பேசுவதே மெச்சத்தக்க நிலையாகும். இது இவர் திறன்களுக்கு அங்கீகாரம் வழங்கியது.

ஈழத்து எழுத்தாளர்களில் மிகக் குறுகிய காலத்தில் நிறையப் பேரால் பேசப்பட்டவர் திரு. சித்ரா மணாளன். இவர் இதயதாகமாய் மேலெழுந்து நின்ற தமிழ்ஈழ மக்களின் வாழ்க்கைநிலை இவரைப் புலம்பெயர்ந்த நாட்டிலும் ஒருவித போர்க்குணத்தோடு உலவ வைத்தமையை உணர முடிகின்றது. தமிழ்ஈழ மண்ணில் நிற்பவர்களுக்கு எத்தகைய மனோநிலை இருக்குமோ அத்தகைய மனோநிலையோடு இயங்கியவர் இவர். இவர் தனக்கு மூத்தோரை மதிப்பதிலும் பேணுவதிலும் பெருவிருப்பமுடையவராய் விளங்கினார். மூத்தோர் ஆலோசனைகளையும் அனுபவங்களையும் முன் உதாரணங்களாகக் கொண்டிருந்தார். அறிஞர்களையும் போற்றி வாழ்ந்தார்.

ஆன்மீகத் தளத்திலும் இவருடைய எழுத்துக்களும் பேச்சுக்களும் பெறுமதி மிக்கனவாய் விளங்கின. என்றும் நினைவுகூரத்தக்க வகையில் ஆன்மீகப் பணியாக புலவரின் சமயச்சொற்பொழிவுகளை ஆன்மீக அலையாக்கி பேச்சுப்பேழையாக **(C.D)** தனது தந்தையாரின் நினைவு வெளியீடாக வெளியிட்டமை எல்லோராலும் மெச்சப்படுகின்ற நற்காரியமாகும்.

சித்ரா மணாளன் அவர்கள் தனது வாழ்நாளில் செய்த நிலையான பணிகள் இரண்டு. ஒன்று ஆன்மீக அலைகளை வெளியிட்டமை. மற்றையது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களை மேன்மைப்படுத்தி தமிழர் குருஷேத்திரக் கீதை" என்ற நூலை வெளியிட்டமை கீதைக்கு ஒரு புதிய பரிணாமத்தை வழங்கிய இவருடைய ஆத்ம தரிசனம் அறிஞர்களால் வியந்து பாராட்டப்படுகின்றது. இக்கீதையின் எல்லா அத்தியாயங்களையும் எழுதி முடிந்தபின்பு தமிழீழத் தேசியத் தலைவரின் வீரக்கரங்களால் வெளியிட வேண்டுமென்று என்னிடம் இவர் சொல்லியிருந்தார்.

இதனை எனக்குச் சொல்லும்போது முகத்தில் மலர்ந்த பிரகாசமும் நம்பிக்கையும் என் நெஞ்சில் பசுமையாய் பதிந்துள்ளன. ஸ்ரீ என்பது இவருடைய இயற்பெயர். உயர்ந்த நிலையை குறித்து நிற்கும் இயற்பெயரை தனது புனைபெயரால் எழுத்துலகிலும் பேச்சுலகிலும் மேலும் உயர்த்திய கடுமையான உழைப்பாளி.

நான் அறிந்த வரையில் இயற்பெயராலும் காரண காரியப் பெயராலும் மக்கள் மனங்களில் வாழும் ஒருவரே சிந்தனைச்சிற்பி சித்ரா மணாளன் என்னும் "ஸ்ரீ".

**YARLTON** FOOD STORE

Division of Gana Trustway Limited

உங்கள் உணவுத் தேவைகள் அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்



**2104 Bridletowne Cr., Scarborough, Ontario, M1W 2L1**

**TEL: (416) 494-9494 FAX: (416) 502-0322**

**இலவச சைவத் தமிழ் வகுப்புக்கள்**

**ஆதி அருள் நெறி மன்ற ஆதரவில் தற்போது 5 இடங்களில் நடைபெறுகின்றது**

1. லாரன்ஸ் போர்ச்மவுண்ட் சந்திப்பில்
2. 2095 வெஸ்ரன் வீதியிலுள்ள தமிழர் சங்கத்தில்
3. மக்லீவன் பெனிகில் சந்திப்பில்
4. மார்க்கம் & எல்ஸ்மெயர் சந்திப்பில் (வூபன் கல்லூரி அறை இல. 134)
5. விக்ரோறியாபாக் & சென்கிளையர் (NO 7 GLEN BURN AVENUE NORTH)

தொடர்புகளுக்கு:
புலவர் ஈழத்துச் சிவானந்தன்
**(416) 438-9171**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இளஞானியின் இழப்பு

ஆசிரியர் பேரம்பலம் கணபதிப்பிள்ளை
செயலாளர் - ஆதி அருள் நெறி மன்றம்

நினைத்துப் பார்க்கவே நெஞ்சு பதறுகின்றது. நேற்று இமயமாய் மேருவாய் நின்ற குன்று இன்று நீறாய் ஆகிவிட்டது போன்ற ஒரு அவலம். பரபரப்பும் அவசரமும் அல்லல்களும் நிரம்பிய மனிதசமூகத்தில் எத்தகைய சலனங்களும் இல்லாது அமைதியான போக்கோடு ஆணித்தரமான அவசியமான செயல்களைச் செய்தவர் இன்று எம்மோடு இல்லை.

திரு. சித்ரா மணாளன் பழகுவதற்கு இனியவர். எல்லோரோடும் நட்போடு நாகரிகமாக நடந்து கொள்வார். எவரையும் பகைக்கவிரும்பாதவர். தமிழ் தமிழினம் இரண்டும் இவர் கண்களாய் காட்சி தந்தன. தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் தனது வாழ்நாள் முழுக்க தொண்டு செய்ய வேண்டுமென்ற துடிப்புடன் வாழ்ந்தவர். பொதுவாழ்க்கையில் எல்லோரோடும் சேர்ந்து கலந்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்னும் சிறந்த குணம் இவருடைய இயல்புகளில் மேலோங்கி நின்றது.

எமது ஆதி அருள்நெறி மன்றச் செயற்பாடுகளில் மனங்கலந்த ஒத்துழைப்புத் தந்தவர். இந்தியத் தமிழ் அறிஞர்களோடு கலந்து நாம் நடத்திய பட்டிமண்டப நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைய டாக்டர் ஆதியோடு கருத்தொருமித்துப் பணியாற்றியவர். சொல் ஒன்று செயல் ஒன்றாக வாழாதவர். உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களை விட்டு விலகிக் கொள்வதே இவருடைய வழக்கமாகியிருந்தது. யாரையும் புண்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் எள்ளளவும் இவரிடம் இருந்ததில்லை. பிறரைப் புண்படுத்துவதற்கும் இழிவு படுத்துவதற்கும் திட்டங்கள் போட்டு தியானத்தில் இருப்பவர்களுக்கு சித்ரா மணாளன் ஒரு சிம்ம சொற்பனமாவார். இவர் அவர்களிடம் சிரித்தபடி கூறிய அறிவுரைகள் அவர்களை என்று திருத்துமோ யான் அறியேன்.

ஓர் இளைய ஞானியாய் வாழ்ந்த இவருடைய பேச்சிலும் எழுத்திலும் ஞானத்தன்மை வீசியதை, இழையோடியதை சகலரும் அறிவார்கள். நமது வருங்காலச் சந்ததிகள் அன்பு, பண்பு, ஒழுக்கம், ஒற்றுமைகளோடு ஆனந்தமாக வாழ வேண்டுமென்று ஆத்மார்த்தமாகவே ஆசைப்பட்டவர்.

எதிர்காலத்தில் எத்தனையோ எண்ணங்களை நம் மத்தியில் விதைக்க இருந்தவர். இன்று சிதைக்கு விருந்தாகியமை நமது விதி செய்த சதியாகும். விதியை நொந்து என்ன கண்டோம். இனி வருங்காலத்தில் சித்ரா மணாளன் அவர்களின் சிந்தனைச் சிறப்புக்கள் எல்லோருக்கும் மனங்கொள்ளும் மார்க்கமாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

அன்னாரின் ஆத்மா நித்தியானந்த நிலையில் நின்று நம்மை வழிநடத்துமாக.

# இறைவனிடம்..........?

என்னைக்காக்கும் பரம் பொருளே!
உன்னையொன்று கேட்கிறேன்
மண்ணிலென் நண்பர்களை
எண்ணி அடுக்கடுக்காக,
கொள்ளிபோட்டு சுடுவதற்கா
பாவி என்னைப் படைத்துவிட்டாய்?
"மாமனிதன்" மறைந்த துன்பம்
நானழுது தீர்க்கு முன்னே,
ஏனழைத்தாய் அடுத்தவனை?
கீதை தந்த மன்னவனே.

பள்ளி சென்ற காலந்தொட்டு
கள்ளமற்ற எங்கள் நட்பை
எள்ளளவும் இரக்க மின்றி
கள்ளமாய் பறித்து விட்டாய்

பூவுலகில் நல்லவரை
வாழவிட நீமறுக்கும்
காரணத்தை கூறி விடு - என்
ஆத்திரத்தை தணித்து விடு...

மானிடத்தை தொலைத்து நிற்கும்
பார்தனில் சீறி எழுந்தானே - நம்
போரினிலே உயிர்ப்போரை
கோவிலதாய் மதித்தானே ....!

தேசிய தலைவரினை தமிழர் எம்
கீதையில் உரைத்தானே! - அவன்
பாதையில் தனையிணைத்து - புலிப்
பதாகையை வரைந்தானே

சைவநற் புலவராம் நம்
ஈழத்து சிவானந்தரின்
நன்னெறி குவித்தானே! ஸ்ரீ அதை
சீடிகளாய் விதைத்தானே....!

இன்னமும் என்னதானவன்
உன்னிடம் குறைவைத்தான்
என்னிடம் கூறாயோ? உன்
மௌனத்தை கலைக்காயோ?
புன்னகையின் செல்வனை
சொல் எழிலின் மைந்தனை
சித்திராவின் மணாளனை - என்
நண்பனை கொன்றவனே - இனி
உணர்வாய் நீ உன்பிழை

"புங்கைப் பிரியன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதான மலர்களாய்......!

வாழ்வு வசந்தத்திற்காய்
மனிதம் விற்பவர்கள்
மத்தியில்–
மனித மாண்புக்காய்,
வசந்தம் தொலைத்த
வள்ளல் நீ!

விரலால் நசுக்கும் எறும்பை,
வெட்டி வீழ்த்தும் வீரர்
மத்தியில் -
விழலாய், வீணாய்
வெட்டியாய் - வீரம்பேசா-
சுத்தமான வேங்கை நீ!

விடுதலை வேள்விக்கு
வேதமோதிய
வெண்நிற வேட்டி
வேதியன் நீ!
உந்தன் கீதைக் கீதத்தின்
சுருதி கலைகையில்
கண்ண பரமாத்மா-
என்ன மோனத்திலா
இருந்தான்?

குறைப்பிரசவிப்புக்களைத்
தந்து-
குதூகலித்துக் கொக்கரிப்போர்
நடுவிலே-
"மொழு மொழுக்" குழந்தைகளை
மொத்தமாய்த் தந்தவன் நீ!
உன்-
தாலாட்டுச்சத்தம் வந்து
எம் நெஞ்சைத்
தாலாட்டு முன்னரே,
உன்-
கால்மாட்டில் கதறியழும்
முகாரி கேட்கவைக்க -
காலன் தூதாய்-
வந்தது யார்?

இழிவு வருகையில்
இறப்பது தமிழன் மாண்பு
வாழ்வில்-
சிறப்பு வரும்பொழுதும்
அழிவதென்பது
எவர் சொன்ன நீதி?
அது உனக்கு மட்டுமே
பொருந்தி வருமெனில்-
மனித குலத்திற்கே பொறுக்காத
மாபெரும் மாபெரும் அநீதி!

உன்னிடம் உருப்பெற்ற
வார்த்தைகள்......
மென்மையின் வரம் பெற்ற
சேர்க்கைகள்......!
உன் -
ஆளுமைக் கருத்துக்கள் கூட
அன்பை "இரவல்" வழங்கி
இணைந்தே வந்தன!

நீ அதிர்ந்து தந்த
வார்த்தைகளுமில்லை!
வந்த வார்த்தைகள்
வெறும் சருகாய்
உதிர்ந்து போனதுமில்லை!

நீ மட்டுமென்ன.........
வாடிப் போன-
வெள்ளை மல்லிகையா?
இல்லையே....
எங்கள் சந்ததி -
தேடித்தேடித் தரிசிக்கும்
தெய்வ சந்நதியாயல்லவா
ஆகி விட்டாய்!
உன் பாதத்தில்
நாங்கள் தான் இப்போது
பூஜை மலர்களாய்..........
வாடத் தயாராகி நிற்கிறோம்!
உன் கீதையைப் -
பாடத் தயாராகி நிற்கிறோம்!

**திருமதி. கோதை அமுதன்**


ACC
CRYSTAL AUTO COLLISION CENTRE LTD.
BMW
Complete Body Work and Painting
* APPAN * - * NADA *
3168 Hurontario St., #2, Mississauga L5B 1N9
Tel: (905) 804-0505 Fax: (905) 804-1551




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலன் உன்னிடம் தோற்றுப் போனான்

**துரை இரவீந்திரன்**

ஆன்மீகமா? அரசியலா? மேதகுபிரபாகரன் அவர்களிடம் விஞ்சி நிற்கிறது? என்ற கேள்வியை எழுப்பி எங்களை விழிப்படைய வைத்து அந்த கேள்விக்கு பதிலாய் ஆன்மீகம்தான் தேசியதலைவரிடம் விஞ்சி நிற்கிறது என்பதை அழுத்தமாக உனது தமிழர் குருஷேத்திரக் கீதை மூலம் சொன்னாய். அதுமட்டுமா? எமது விடுதலைப் போராட்டம் ஒரு இனத்தின் விடுதலைக்கு மட்டுமான போராட்டம் அல்ல. உலக மக்களின் தாயக விடுதலைக்குமான போராட்டம் என்று அன்றைய விழா மேடையில் கூறி தமிழீழ விடுதலை போராட்டத்துக்கு புதுவடிவம் கொடுத்தாய். யார்? இந்த சித்ரா மணாளன் என்று எல்லோரும் உன்னை உற்றுப்பார்த்தபோது நீ கண்ணை மூடிக்கொண்டதன் காரணம் யாது?

உங்கள் சிந்தனைகள் என்றுமே வித்தியாசமான கோணத்தில் இருக்கும். எதற்கும் ஆதாரம் தேடுவீர்கள். சொல்ல வரும் விடயத்துக்கு விளக்கம் உங்கள் விரல் நுனியில் இருக்கும். தமிழர் குருஷேத்திரக் கீதை முழுவதையும் எழுதி தேசியத் தலைவர் அவர்களால் தமிழீழத்தில் வெளியிட வேண்டும். நான் இந்த நூலை எழுதி முடிக்கும்போது தமிழீழம் மலர்ந்திருக்கும் என்று கனவு கண்டீர்கள். உங்கள் கனவின் முகவுரையை மட்டும் எழுதிவிட்டு உங்கள் வாழ்வின் முடிவுரையை எழுதிக் கொண்டதன் காரணம் ஏது?

புரியவில்லை எமக்கு. விட்டிலைப் போல உங்கள் வெளிச்சத்தில் மினுமினுத்தவர்கள் நாங்கள். இருளை எமக்கு பரிசளிக்க ஈசன் விரும்பியது ஏனோ? "பிறப்புண்டேல் இறப்புண்டு" இது சகலருக்கும் தெரிந்த தத்துவம் ஆனால் மரணம் எப்போது என்று எவருக்கும் தெரியாத பரமரகசியம் ஆனால் உங்களுக்கு மட்டும் தெரிந்தது எப்படி?

சாவுக்குத் திகதி நேரம் குறித்துச் செல்லும் அதிசயம் எம் தேசத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் வழிபாட்டுக்கு உரியவர்கள் என மேடை தோறும் முழக்கமிட்ட நீங்களுமா உங்கள் திகதியை அறிந்து கொண்டீர்கள்.

"தமிழர் குருஷேத்திரக் கீதை வெளியீட்டு நாளும் தியாகி திலீபனின் நினைவுநாளும் ஒரு தினத்தில் இருப்பதால் புத்தக வெளியீட்டு நாளை மாற்றும்படி" அன்பு வேண்டுகோளை உங்கள் முன்வைத்தவர் நீங்கள் மதித்துப் போற்றிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களும், டாக்டர் ஆதிகணபதி அவர்களும். ஆனால் நீங்களோ..." உங்களுக்கு மதிப்பளித்து விழாவை நிறுத்துகிறேன். ஆனால் புத்தக வெளியீட்டை நிறுத்த மாட்டேன் 30ம் திகதிக்கு முதல் புத்தக வெளியீடு நடைபெற வேண்டும்" என அன்பாக மறுத்துரைத்தீர்கள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த நான் அதிர்ந்தேன். என்றுமே சாந்தமாக பேசும் உங்கள் வார்த்தையில் பிடிவாதம் உருக்கொண்டதேன் என எண்ணினேன். காலனின் கணக்கை நீங்கள் அறிந்து உங்கள் கனவை நிறைவேற்ற கங்கணம் கட்டிக் கொண்டதை நாம் அறிந்திருக்கவில்லை.

காலன் உங்களிடம் தோற்று தன்மேல் கறைபூசிக் கொண்டான் கனவை இனிதாக்கி வரலாறு படைத்து விட்டீர்கள். மரணபயத்தை நான் உங்களிடம் பார்த்த தில்லை. ஆன்மீகத்தை ஐயம்திரிபற கற்றதனால் ஆன்மாவுக்கும் அழிவில்லை என எமக்கு போதித்தீர்கள். வாழ்வியல் யாகத்தில் உங்கள் உடலை ஆகுதியாக்கி என்றுமே காலத்தால் அழியாத கவியமான தமிழர் குருஷேத்திரக்கீதையை எமக்கு தந்து சென்றீர்கள்.

உங்கள் நூலை வாசித்துவிட்டு வாழ்த்து சொல்ல வந்த தொலைபேசி அழைப்புக்கு எல்லாம் நீங்கள் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டீர்கள் என்று செய்தியை சொல்ல வைத்த அந்த கூடத்தின் செயல் மகாகொடூரம்.

தரணிக்கு நீயோர் தத்துவம் சொன்னாய்
தமிழீழத்துக்கு நீயோர் கீதையை தந்து சென்றாய்
புதியதோர் புரட்சி செய்தாய்
பூவுலகம் போற்றும் என்நாளும்
மீண்டும் பிறந்து வருவாய் எங்களிடம்
அதுவரை காத்திருப்போம் எனநாளும்
உங்கள் நினைவுகளுடன்

உங்கள் தன்னறிமுக அட்டையினை தமிழ் மகளில் விளம்பரப் படுத்துங்கள்
மாதமொன்றிற்கு
**$15.00 மட்டுமே**
**விபரங்களுக்கு: (416) 751-2022**

**முழக்கம்**
**கேட்கிறதா உங்களுக்கு!**
"முழக்கம்" இதழ் திரட்டும்
பட்டினிச்சாவு விரட்டும் நிதிக்கு
உங்கள் பங்களிப்பை
வாரி வழங்குங்கள்
அன்புடன்
தமிழ் மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரங்களைத் தொட்ட சித்ரா மணாளா!

சிகரங்களைத் தொட்டவனே
சிந்தனைச் சிற்பியே
உன் சுவடுகளை மட்டும் – எம்
மனத்தில் பதித்து விட்டு
எங்கு சென்றாய்

அண்ணா!
எனக்குள் ஒரு கேள்வி
உன்னை ஓர் "மாமனிதனாகப் பார்ப்பதா"
அல்லது
ஒரு "ஞானி" யாகப் பார்ப்பதா என்பது
மரணத்தைத் துணிந்து அணைத்துக் கொள்பவன்
"மாவீரன்"
அதன் நேரத்தை முன்கூட்டியே அறிந்து
செயல்படுபவன் "ஞானி"
நீ நிச்சயமாக ஒரு ஞானிதான்
இல்லாவிட்டால்
உன் இறப்பின் திகதி அறித்து
"தமிழர் குருஷேத்திரக் கீதையை"
தகுந்த நேரத்தில்
பிரசவித்திருப்பாயா!

இலக்கியக்கடலில்
முத்துக்குளித்தவரல்லா நீங்கள்
ஆன்மீக அலைகளில்
மிதந்து தெளிந்தவனல்லவா நீங்கள்
மனித சரித்திரத்தை அடிக்கடி
தூசிதட்டிப் பார்த்தீர்களே
அதனிலும் மேலாய்
மனிதாபி மானத்தை மனிதங்களில்
விதைத்து விட்டல்லா
சென்றிருக்கின்றீர்கள்

மகாத்மா காந்தியா
காஞ்சிப் பெரியவரா
அகிம்சையில் சிறந்தவர்
என்ற கேள்விக்கு
எனக்கு அறிவான
விளக்கம் தந்தீர்களே
அப்போதுதான் நீங்கள்
ஆன்மீக உலகின்
சிகரங்களைத் தொடக்கண்டேன்
ஓம்
சித்திரா மணாளனே
சிந்தனைச் சிற்பியே
சிகரங்களைத் தொட்டவர்
நீங்கள்.

அன்புடன்
தம்பி
சிவசாமி திருச்செல்வம்

# முத்திக்கு ஏற்ற முழு ஆன்மா

அறிவு கொலுவிருக்கும்
அடக்கம் நிலவெறிக்கும்.
பண்பு கனிந்திருக்கும்
பழகச் சுவைத்திருக்கும்.
ஒழுக்கம் உயர்ந்திருக்கும்
விழுப்பம் மிகுந்திருக்கும்.
எழுத்தில் தமிழ் உணர்வு
பழுத்துக் கனிந்திருக்கும்.
தமிழர் குருசேத்திரக்
கீதை மேதையிடம்–
எவ்வளவோ எதிர்பார்த்தோம்
அவ்வளவும் மண்ணாமோ?
பொங்கிவரும் வேளையிலே
புதுப் பானை உடைந்ததுவோ?
பல பழங்கள் தரவிருந்த
பலா மரமும் பட்டதுவோ?
என்னையா பிழை செய்தோம்?
மன்னவனே! மதிவலவ!
சிந்தனைச் சிற்பி
சித்ராமணாளா!
சிந்தை கவர்ந்த சிறந்தநல் நண்பா!
உந்தன் மனம் நோக
ஊறென்ன செய்துவிட்டோம்?
ஏமாற்றி விட்டாயே!
'தாமார்க்கும் குடியல்லாச்
சங்கரனைச்' சென்றடைய
ஏன் இந்த அவசரம்?
அரியவுன் கீதையால்
இருவினையும் கெட்டு
முத்திக்கு ஏற்ற முழு ஆன்மாவாயினையோ?
தூங்கு!
நிர்மலனின் திருநிழலில் தூங்கு!
நிகரற்ற சாந்தியிலே நீந்து!
இறுதியாக அந்த மேடையிலே நீ
உறுதியோடு சிந்திய வார்த்தைகள்–
எங்கள் உள்ளங்களில்
என்றென்றும் இருந்து உன்னை அர்ச்சிக்கும்!
உலகெங்கும் உன்புகழைக் கர்ச்சிக்கும்!

கவிஞர் வி. கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவகம் தந்த அறிவுச் சுடர் அணைந்து கொண்டது

**தீவகம் சோம. சச்சிதானந்தன்**

தமிழ் இன உணர்வும், தமிழ் ஈழ விடுதலைப் பற்றும் கொண்டு அன்று உதயமாகிய தமிழரசுக் கட்சியுடன் இரண்டறக் கலந்து அகிம்சை ரீதியில் இடம் பெற்ற சத்தியாக்கிரக, உண்ணாவிரத, தரப்படுத்தல் குடியரசு தினப் பகிஸ்கரிப்பு நிகழ்வுகளில் எல்லாம் கலந்து கொண்டும், பல அரசியல் தலைவர்கள், சமய தமிழறிஞர்கள் பாதம் பதித்ததும், இந்து சமய குரவர் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தினத்தை இன்றுவரை தவறாது கொண்டாடியும், துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு பட்டத்தை வழங்கியும், தியாகி திலீபனின் புகழுடம்பு ஊரதீவு இழந்தமிழர் மன்ற அறிவக முன்றலுக்கு எடுத்துவரப்பட்டு பல ஆயிரம் மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியும், தமிழ் ஈழவிடுதலை வேள்வித்தீயிற்கு கடற் கரும்புலிகளையும், மாவீரர்களையும் அர்ப்பணித்து பெருமை பெற்ற வீரத்தின் விளைநிலமான ஊரதீவு என்னும் பெரும் பதியில் அவதரித்தவர்தான் அறிவகம் தந்த அறிவுச்சுடர் அமரர் எஸ். கே. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள். தமிழ்மீது மிகுந்த ஆழமான அறிவும், ஆன்மீகப் பற்றும் என்றும் உள்ளத்தில் எவர்க்கும் துன்பம் நினைத்திடா தூய உண்மையொளி. எல்லோர் இதயங்களிலும் தனது கூரிய எழுத்தாற்றல் பேச்சாற்றல் மூலம் இடம் பிடித்து மிகுந்த வாஞ்சையுடன் ஒட்டி உறவாடி மகிழ்ந்த ஓர் உயர்ந்த பண்பாளர். தான் பிறந்து தவழ்ந்த தாயக மண்மீது தீராத காதல் கொண்டவராய் தாயக தமிழ் ஈழவிடுதலை உணர்வுகளை தனது உதிரத்தோடு சுமந்த வண்ணம் மனித கலாச்சாரத்தையும், மனித நேயத்தையும் மனதார நேசித்து தமிழ் ஈழக் காவியத்தில் அதர்மம் அழிந்து தர்மம் வெல்லும் என விடுதலைக் களமாடும் வீரவேங்கைகளை சிறப்பித்தும், தமிழ் ஈழவரலாற்றின் தன்னிகரில்லாத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களை முதன்மைப்படுத்தி தமிழர் குருஷேத்திரக் கீதை எனும் அரும் பெரும் நூலை இத்தரணிக்களித்தும், தனது தந்தையார் நினைவாக ஆன்மீக அலைகள் என்னும் ஒலித்தட்டை வெளியிட்டும், தனது ஆற்றல் மிகு ஆளுமையால் பல விவாத வழக்காடு பட்டிமன்ற அரங்குகளை தனது இனிய குரல் வளத்தால் வசீகரித்துக் கொண்ட எந்தன் சிந்தனைச்சிற்பி சித்ராமணாளன் அண்ணாவின் பிரிவின் துயரம் இன்னும் தான் எம் சிந்தையை வாட்டுகிறதே

எம் தந்தையார் தமிழ் இனத்தின் முதல் விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சியுடன் முழுமையாக அர்ப்பணித்து செயல்பட்ட காலங்களில் அவருடன் ஊரதீவு இளந்தமிழர் முன்றலில் நடைபெறும் - அரசியல் கூட்டங்கள் - சிவராத்திரி விழாக்கள் - அறிஞர் அண்ணா நினைவு தினம் இப்படிப்பல வேறு நிகழ்வுகள் நடைபெறும் போது நானும் சென்று வருவதுண்டு. அவ் விழாக்களில் இரண்டு இளைஞர்கள் மிகுந்த ஆளுமையான தோற்றத்தில் தமிழ் உணர்ச்சிமிகு எழுச்சியுரைகளை நிகழ்த்துவதுண்டு. ஒருவர் மறைந்த மண்மறவாத மாமனிதர் அமரர் எஸ். கே. மகேந்திரன் அவர்கள். அடுத்தவர் - திராவிடமுன்னேற்றக் கழக அந்நாளைய தொண்டர்கள் போன்று உரைநிகழ்த்துபவர் அண்ணர் எஸ். கே. ஸ்ரீஸ்காந்தராஜா அவர்கள். இவர்கள் இருவர் மூலம் இவர்கள் பிறந்த மண்ணும் மக்களும் பெருமை பெற்றதே என்று கூறலாம். அந்த இரு துருவங்கள் இன்று எங்கள் மத்தியில் இல்லையே என்கிறதை நினைக்கின்றபோது எம் இதயம் வேதனைப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டில் சிங்கள இனவாத அரசுகளும் சிங்கள அரசியல் தலைவர்களும் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளை, அரசியல் சரித்திரத்தை தமது மனங்களில் நிறைத்து வைத்திருந்த இருமனிதர்கள் இன்று எம்மத்தியில் இல்லை. மானசீகமான எங்களின் சித்ரா மணாளனே உந்தன் ஆழமான தாயக விடுதலை நேசம் - எம் தேசம் விடுதலை பெறும் காலம்- விரைவடைந்து பல வீரமிகு தியாகங்களினாலும் அர்ப்பணிப்புக்களினாலும் புறநானூறு படைத்துக் கொண்டிருக்கும் போர்க்களத்தில் ஆற்றல் மிகு அணித்தலைவனின் படை வீரவரலாற்றை படைத்துக் கொண்டிருக்கின்றன அந்த நாள் விரைவில் வந்திடும். அவ்வேளை நீ கொண்ட கனவு நனவாகிடும். உயிர் நீத்த உன் உருவம் நாம் காணாத போதும் உயிராக நீர் படைத்த கீதையால் கண்டிடுவோம். உந்தன் இனிய ஆத்மா பாணாவிடையான் பாதார விந்தங்களை சென்றடைந்திருக்கும் என்று மனநிறை வடைவோமாக.

SIVASAKTHI
JEWELLERY
அதிர்ஸ்டக்கல் மோதிரம்
மாணிக்கம், நவரத்தினம் வாங்க நம்பிக்கையான ஒரே இடம்
சகல 22K நகைகள் புதிய டிசைன்கள்
TEL: (416) 267-4141
2607 Eglinton Ave. East
Scarborough, ON.
M2K 2S2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் சிந்தனையில் சிந்தனைச் சிற்பி

நாதன்

அண்மையில் நம்மை எல்லாம் விட்டு இறைவன் அடிசேர்ந்த "சிந்தனைச் சிற்பி" சித்ரா மணாளன் என்று அழைக்கப்படும் என் இனிய நண்பர் சிறிஸ்கந்தராசா அவர்கள், தான் பிறந்து வளர்ந்த மண்ணான புங்குடுதீவு, ஊரைதீவு கிராமத்திலும் தமிழ் ஈழத்திலும், டென்மார்க்கிலும், கடைசியாக கனடாவிலும் அவர் வாழ்ந்த காலத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் நாடக நடிகராகவும், கனடாவில் நடைபெறும் பட்டிமன்றங்களில், நகைச்சுவை கலந்த பேச்சுக்களிலும் தனக்கு என்ற பாணி அமைத்து அதன் மூலம் சிறந்த தொண்டாற்றி கனடாவாழ் இனிய தமிழ் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்ட என் இனிய நண்பரின் சொற்குவியலையும், பொருட்குவியலையும் நாம் இனி எப்போ காண்போம். திரு. சித்ராமணாளன் அவர்கள் தமிழ் மக்கள் யாரைக் கண்டாலும் மிகவும் பண்புடனும், அன்பாகவும், நகைச்சுவையாகவும் பேசுவார்.

அந்த இனிய முகத்தையும் அவரின் சிறந்த எழுத்தாற்றலையும் மேடைப்பேச்சுக்களையும் நாம் ஒரு கணம் நினைத்துப் பார்க்கும்பொழுதும், அவர் தன் நண்பர்கள் மற்றும் உறவுகளைக் காணும்பொழுது, அவரின் அந்த அழகான சிரிப்பும் கதையும் எல்லோரையும் நெகிழ வைக்கும் ஒரு சிறந்த பண்பாளர். அவரின் திடீர் மரணச் செய்தி 30-9-98 நள்ளிரவு தொலைபேசி மூலம் எனது மைத்துனர் பிரபா அவர்களினால் அறிவிக்கப்பட்டபொழுது என்னையே அறியாமல் சத்தமிட்டு அழுதுவிட்டேன்.

அவர் இறப்பதற்கு முதல் சனிக்கிழமையன்று அவர் எழுதி வெளியிட்ட "தமிழர் குருஷேத்திரக் கீதை" பல நூற்றுக்கணக்கான தமிழ் அறிஞர்கள், தமிழ் மக்கள் முன்னிலையில் மிகவும் சிறந்த முறையில் வெளியிடப்பட்ட பொழுது, அவரின் சிறந்த எழுத்தாற்றலையும் திறமையையும் பாராட்டியதோடு, மட்டும் அல்லாமல் இற்றைக்கு சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்நடைபெற்ற பாரதப்போரை மையமாக வைத்து எழுதப்பட்ட பகவத்கீதையை பின்னணியாகக் கொண்டு, தற்பொழுது தமிழ்ஈழ விடுதலைக்காக, போரிடும் விடுதலைப்புலிகளையும் மேதகு வே. பிரபாகரன் அவர்களையும் மேன்மையாக வைத்து சிங்கள அரக்க கொடுங்கோன்மை அரசுடனும், இராணுவத்துடனும் நடைபெறும் ஈழப் புனிதபூமியை வென்று எடுக்க நடைபெறும் புனிதப்போரை முதன்மையாகக் கொண்டு தமிழ் ஈழத்திலும் வன்னி மண்ணில் நடைபெறும் போர் நிகழ்வுகளையும் மையமாக கொண்டு "தமிழர் குருஷேத்திரக்கீதை" என்னும் சிறந்த நூலை வெளியிட்டு உலகு எங்கும் வாழும் தமிழ் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துக்கொண்ட சித்திரா மணாளன் எங்களை எல்லாம் ஆறாத் துயரத்தில் விட்டு விட்டு மீளாத்துயில் கொண்டு விட்டார். ஆனால் அவர் எழுதிய தமிழர் குருஷேத்திரக்கீதை தமிழ் நெஞ்சங்கள் உலகில் உள்ளவரை வாழ்ந்து கொண்டே இருக்கும்.

## திருமதி சித்ரா மணாளன் நன்றி தெரிவிக்கின்றார்

என் ஆருயிர்க் கணவரின் திடீர் மறைவைக் கேள்விப்பட்டதும் உடன் ஓடிவந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அவருடைய இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும், அஞ்சலி உரைகள் நிகழ்த்தியவர்களுக்கும், செய்திகளையும், கட்டுரை, கவிதைகளையும் எழுதியவர்களுக்கும், வெளியிட்ட பத்திரிகை களுக்கும், செய்திகளையும், பேட்டிகளையும் ஒலிபரப்புச் செய்த வானொலிகளுக்கும், எனக்கும் பிள்ளைகளுக்கும் அனுசரணையாய் விளங்கிய உற்றார், உறவினர், ஊரவர், என் கணவரின் நண்பர்கள் அனைவருக்கும், என் கணவர் துணை ஆசிரியராய் பணி புரிந்த "தமிழ்மகள்" இதழ் வழி நன்றியைத் தெரிவித்து வணங்குகின்றேன்.

நன்றி - வணக்கம்
திருமதி. சித்ரா மணாளன்

வாரந்தோறும் நீங்கள் வாங்கும் கடை
லூர்ட்ஸ்
அனைத்துப் பொருட்களும் விசேட மலிவு விற்பனையும்
LOURDES
EAST & WEST INDIAN STORE
195 & 199 மார்க்கம் வீதி, ஸ்காபரோ
TEL: (416) 266-5025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர்களில் இங்கு இருப்பவரும் சிலருண்டு

ஈழத்திருநாட்டின் இளம்பிறையாய் விளங்குவது எங்கள் புங்கைத்தீவு - அங்கு
ஞாலம் விளங்கும் நல்லதோர் ஊருண்டு அவ்வூர் ஊரைதீவு
சாலச்சிறந்த தமிழ்குடிதன்னில் மூலப்பிள்ளையாய் பிறந்தான் சிறி - அவரை
வேளைக்கு இப்பூமி வெறுத்ததேனோ எவருக்கும் விளங்கவில்லை.

பிறந்தவர் உறுவது பெருகிய துன்பம் பிறவாதவர் உறுவது பெரும் பேரின்பம்
அறிந்தவர் போனார் போலும், ஆற்றொணா துன்பம் அடைவதும் நாமல்லவோ
கறந்த பால் முலைக்கேறுமா, அவர் காட்டிய வழியைக்கற்று நாம் நிற்போம்
இறந்தவர் துறந்தவர் எங்கிவர் போனார் இறைவனடியெனும் இடரில்லாவிடமே.

தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்றென்பர்
சான்றோர் கூறியபடி தம்பி சக்தியும் வெற்றியுமாய் திகழ்ந்தான்
சேற்றில் தாமரை எதுவோ, அதுபோலச் செறிந்தது இவன் புகழ் உலகில்
மாற்றிலா பொன் போல் அவன் மனம், மற்றவருக்கோர் தீங்கிலாது வாழ்ந்தான்.

கற்றது கடுகளவாகினும் உற்றதுணை புரிந்தது அவன் கல்வி, அவருக்கே
பற்றது அவன் வாழ்வில் பற்றிற்று தன்தாய் நாடும் தம் தலைவனிலுமே
முற்றியது மூளை பெரிதாய் முடித்து வைத்தான் பெரும் சரித்திரத்தை கீதை வழியே
பற்றற்றான் பறந்து போனான் விண்பாதை வழியே தன் பரமாத்மா விடத்தே

பிறப்பவர் இறப்பதெனும் விதியுமாச்சு, பெரும் போர்களைக் கண்டு நம்மனம் ஊறியும் போச்சு
சிறப்புற வாழ்ந்த சிறுகுடும்பம் சிறகொடிந்த பறவைகளாய் துடிப்பதுதான் பெருந்துயரம்
மறக்கவும் முடியுமா இம்மானிலத்தில் இவன் போல் இனியவன் பெரியவன் எங்கு காண்போம்
அறப்போர் புரியும் நம்மினம் அழிவதில்லையே அதுபோல் சிறப்புற வாழ்ந்து
- இச்செம்மலின் சேவையைச் செய்வோமாக.

அண்ணல் அன்பற்கு அன்பன் ஆதிஅருள் மன்றத்தில் ஒரு அறிவொளியுமாவான்
பின்னர் அவன் இருப்பின், தமிழ் பிற்காலச் சந்ததிக்கு பெரியதோர் சிற்பியவன்
அன்னதானப்பிரியன் பாணாவிடை ஐயனாரின் அடிமையவன்
சொன்னால் முடியுமோ சொர்க்கம் அவன் போய்விட்டான் சோதனை எமக்கல்லவோ!

மனவி மக்கள்

ஐயகோ அனாதைகளாய் வந்த எம்மை அணைத்துக் காத்தீர்
அயராது உழைத்து எமக்கு அமுதூட்டினீரே
பொய்யல்லா சொல்வாய் நீயும் போகமாட்டேனெனவும்
மெய்யாகப் போய் விட்டாயா! இல்லை இல்லை உன் பொற்குயில்கள் பாடுவதை கேட்கவாரீர்.

கவி ஆக்கம்
சி. க. நல்லையூரான் (தமிழீழம்)
கனடா

ஆதி அருள்நெறி மன்றம்
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீமட்டும் கண்ணனோடு.....

**திருமதி கலாநிதி குலமோகன்**

தொலைபேசி மணி ஒலித்தது. சென்று தொலைபேசியை எடுக்கின்றேன். மறுமுனையில் இருந்து சித்ரா மணாளனின் குரல் ஒலிக்கின்றது. ஒருவித சந்தோசமும், உற்சாகமும் கலந்த நிலையில் மனநிறைவுடன் பேசுகிறார். கடந்த இரண்டு தினங்களுக்கு முன் நடைபெற்று முடிந்த தனது நூல் வெளியீட்டு விழாவைப் பற்றிய சுருக்கத்துடனும், நன்றி தெரிவிப்பதுடனும் தொடர்ந்த அவரது உரையாடல் இறுதியில் மாவீரர்களின் மகத்துவம் பற்றிய செய்தியுடன் நிறைவுறுகின்றது.

மாவீரர்களின் உருவங்கள் இந்து ஆலயங்களில் உள்ள தேர்களில் செதுக்கப்பட வேண்டும். கரும்புலிகள் வழிபாட்டுக்குரியவர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும். ஈழவிடுதலைப்போராட்டத்தின் உன்னதமும், புலிவீரர்களின் தியாகமும், சர்வதேச மட்டத்தில் உணரப்படத்தக்க முறையில் இவை சார்ந்த வெளியீடுகள் மொழி பெயர்க்கப்படவேண்டும். இம் மூன்று கருத்துக்களும் அவர் என்னுடன் உரையாடிய இறுதி உரையாடலின் சாராம்சங்களாகும்.

இந்த நல்ல சிந்தனையின் வெளிப்பாட்டை எண்ணி எண்ணி சித்ரா மணாளனின் உட்கிடக்கையின் உண்மைத் தன்மையை ஏனையவர்களுக்குக் கூறமுன்னரே அடுத்த இரண்டு நாட்களில் சகோதரர் அமரத்துவம் அடைந்துவிட்டார். இந்த அதிர்ச்சி தரும் செய்தியைக் கேட்டதும் நம்பமுடியாமல் பலருடன் தொடர்பு கொண்டு உண்மை என்று தெரிந்த பின்னரும் கூட மனம் நம்பமறுத்ததுதான் உண்மை.

இருந்தும் என்ன? சிந்தனைச் சிற்பி சித்திரா மணாளன் விண்ணுலகு சென்றதுதான் உண்மை என்று ஆக, அந்தப் படைப்பாளியின் மனிதத்தை, நேயத்தை, நேர்மைத் தன்மையை, பண்பை, அன்பை, பிறர் போற்ற வாழ்ந்த வாழ்வை, பேச்சாற்றலை, இன்னும் அந்தச் சகோதரனுள் நின்று நிலைத்த அத்தனை ஆற்றல்களையும் நினைவு கூர்ந்து, அந்த நினைவு கூருவதால் ஓரளவு நிம்மதி பெற்று, ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து, எனது துயரம் தோய்ந்த ஆறுதலை அமரர் சித்திரா மணாளனின் அன்புத் துணைவி, பாசத்துக்குரிய சகோதரி சித்ராவுக்கும், அன்புக் குழந்தைகளுக்கும் கூறி அவர்களது துன்பத்தில் நானும் கலந்து நிற்கிறேன்.

சித்ரா மணாளன்! மெல்லிய உருவம், நின்று, நிதானித்து அளவுடன் பேசும் சுபாவம். முகம் மலர்ந்து புன்னகைத்தால் மனம் நிறையும் சிரிப்பு, பேச்சுக்கும் செயலுக்கும் பேதமற்ற தன்மை, தாயகத்தை, புலிவீரரை நேசிக்கும் தேசப்பற்று, தெய்வீகப்பார்வை, இவை அத்தனையும் கலந்து எம்முன் நடமாடிய மனித நேயம் மிக்க ஒருவர் இன்று...... எம்முடன் இல்லை.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு

தான் இல்லை என்ற குறை இல்லாமல் இருப்பதற்குத்தான் தனது கையளிப்பாக "குருஷேத்திரக் கீதை" என்ற இலக்கியத்தை தந்துவிட்டுச் சென்றிருக்கிறார் அமரர் சித்திரா மணாளன் அவர்கள். பலவகை நூல்களை ஆய்ந்து ஆய்ந்து அவற்றுள் தான் எடுத்துக் கொண்ட கருத்துக்கமைவானவற்றைத் தேர்ந்து, தேர்ந்து அவற்றைத் தனது எழுதுகோலால் மிக மிக அழகாகச் செதுக்கித் செதுக்கித் தந்துள்ளார் இந்தச் சிந்தனைச் சிற்பி.

ஒருவன் எத்தனை நாட்கள் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல. அவன் வாழும் போது என்ன செய்தான் என்பதே முக்கியம் என்பதற்கமைய, தனது குறுகிய கால வாழ்வுக்குள் நிறைவான ஒரு இலக்கியத்தைப் படைத்துச் சென்றிருக்கிறார் அமரர் சித்திரா மணாளன். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இந்த உத்தமன், ஊருக்கு நல்லதைச் செய்வேன் எனக்கு உண்மை தெரிந்தவரை உரைப்பேன் என்று தனது நாவன்மையாலும், எழுத்தாற்றலாலும் தனது வரவை ஆழமாகப் பதிவு செய்து விட்டுச் சென்றிருக்கிறார்.

பாழும் விதி வந்து பறித்ததுவே. என் செய்வோம்? எங்குற்றாய் சகோதரனே? வழிஅனுப்ப மனமின்றித் தவித்தாலும் விடைதந்து அனுப்ப முடியவில்லை என்றாலும், ஆத்ம சாந்திக்கான கண்ணீர் நனைந்த அஞ்சலிகளோடு போய் வரவேண்டும் என்று விண்ணப்பித்து நிற்கிறோம். எப்போதோ ஒருநாளாகிலும் சரி, எங்களுடன் வாழ்வதற்காக மீண்டும் வரவேண்டும். அன்பு நிறை குடும்பத்தை நேசம் மிக்க நண்பர்களை, பாசம் உள்ள உறவினரை, ஊரவரை, ஆயிரமாயிரம் வாசகர்களை இவர்கள் அனைவர்களினதும் வேதனையை உனது மரணம் மறுபரிசீலனை செய்யுமா? இவர்கள் அத்தனை பேரின் கண்ணீரை காலன் கவனத்தில் கொள்வானா?

இந்த அன்பு நெஞ்சங்களின் இழப்பை இந்த விதி எங்களுக்கு ஈடு செய்ய நினைக்குமா?. இந்தச் சித்திரா மணாளனை, சிந்தனைச் சிற்பியை காலம் மீண்டும் கையளிக்குமா. " எல்லாம் எப்பபோ முடிந்த காரியம்" என்ற கூற்று கூறுவதற்குப் பொருத்தமாகத் தான் இருந்தது. உனது மரணம் நிகழாதவரை. ஆனால் இப்போது .......... எல்லோரது மனங்களையும் குருஷேத்திரமாக்கி விட்டு, நீ மட்டும் கண்ணனோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்பின் பிறப்பிடமே எங்கள் அணையாத தீபமே
ஆருயிர்த் தோழரே நம் கண்ணீர் ஆறாய் ஓடுதிங்கே
இங்கிதமாய்ப் பேசி இயன்றவரை மகிழ்வித்தீர்
ஈன்றதாய் மண்ணில் இன்பமாய் வாழவேண்டும்
ஈவிரக்கமற்ற பாவியர்கள் இல்லாது ஒழிய வேண்டும்
உருமாறிப் போன இனம் எம் சொந்தமண்ணில்
ஊஞ்சல் கட்டி ஆட வேண்டும்
எத்தனை கனவுகள் நீரும் கண்டீரையா
எங்கள் குலக்கொழுந்தே எம் இதயத் தாமரையே
ஏனையா எமைவிட்டு எட்டாத் தூரம் சென்றீரோ
ஐயம் இட்டுண்டு அன்புடனே மகிழ்ந்தவரே
ஒரு தாய் வயிற்றின் பிள்ளைகளாய் ஒன்றாய்ப் பழகினோமே
ஓங்கி எரியும் தீ உன்னுடலை எரித்தாலும்
ஓசை உனதிங்கே ஒலித்தவண்ணம் இருக்குதையா
காகிதத்தை நானெடுத்து வரைந்திடவே சில வரிகள்
கண்களின் நீரதுவும் காகிதத்தை நனைத்ததையா
கண்களில் நீருமில்லை கதறியழ வழியுமில்லை
உங்கள் பிரிவின் கொடுமையினால் உருக்குலைந்து
- நிற்கின்றோம்
ஊமை விழிகளாலே உமையிங்கு தேடுகின்றோம்
காலனவன் மோசம் செய்து எங்கள் காவியத்தை
மூடிவிட்டான் - எம்மை
கடுந்துயரில் ஆழ்த்தி எம் கண்மணியை ஏன் பிரித்துச்
- சென்றான்
எதனையும் வென்றிட வேண்டும் என்று கூறியநீர்
ஏனிந்த மரணத்தை வெல்லாது போனீரோ
மரணம் மனிதனிற்கு நிட்சயமாய் உண்டெனினும்
மரணத்தை வெல்லாது மௌனமாய்ப் போனீரோ
தமிழர் குருஷேத்திரக் கீதையின் நாயகனே - வெள்ளி
தட்டினில் நூல்வைத்து மகிழ்வோடு எனக்களித்தீர்
சிந்தனைச் சிற்பியாம் சித்திரமணாளனே
பட்டிமன்றத்தில் பங்குகொள்ள பாசமுடன் நீர் அழைத்தீர் - நீர்
அழைத்தகுரல் அலைஅலையாய் என் மனதினிலே
-மோதுதையா
அழுதழுது என் கண்ணில் நீர் வற்றிப் போனதையா
என்றென்றும் எங்களுடன் நீங்கள் வாழ்ந்து
-கொண்டிருப்பீர்கள்.

04-10-98
கனடா

உங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனை இறைஞ்சும்
உங்கள் அன்புத் தம்பி
அமல்குமார் - சின்னத்தம்பி


## தங்கச்சியின் பதில்கள்

தமிழ் மகளின் தங்கச்சி வாசகர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்லி வருகிறாள்.
உங்கள் கேள்விகளை கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்தில் கேளுங்கள்
**(416) 438-9171**


# எந்தன் நெஞ்சினைப்பிளந்துனக்கு......

இரண்யன் நெஞ்சினைப்பிளந்தவன்
கண்டது கண்ணனை
எந்தன் நெஞ்சினைப்பிளப்பவர்
காண்பது உந்தனை
என் ஊனினையுருக்கி உள் ஒளி பெருக்கினாய் – ஏன்
உன் வாழ்வினை போதுமென்றெண்ணியே சுருக்கினாய்
எனையுன் 'இராமகண்ணப்ப'னென்றாய் – அது
இல்லையோ என்னவோ – ஆனால்
நீ அந்த கண்ணதாசன் வரையல்லவோ சென்றுவிட்டாய்
'மாமா' என மாண்புடன் தானழைப்பாய் – உன் இறப்பால்
எனை மாய்த்துத்தான் மாயமாய் மறைந்துவிட்டாயே
சேய் போன்ற உன்உள்ளம் சேர்த்த நண்பர் ஏராளம்
யார் வந்தென்ன யாகத்தீயிலே நீ வெந்த பின்னாலே
நாளொரு மணிநேரம் நயமாய் பேசாவிடில்
நம் தலை வெடித்துவிடும்
உன் குரல் கேளாமல் என் காதும் அடைத்துவிடும்
உன் உறவு உன் சுற்றம் எல்லாமே நானென்றாய்
நள்ளிரவு வேளையிலே எமைவிட்டுப் போய்விட்டாய்
நடுநிசியில் நாவலராம் புலவரும் நானும் நல் நண்பர்
புங்கைப்பிரியனும் – உனைக்காண
விரைந்திட்டோம் மருத்துவ மனைநோக்கி
எமைநோக்கி பேசுவாய் என்றெண்ணி உனைக்காண
துடித்தோம்
நீயோ உணர்வற்றுச் சிவமானாய் – நாமோ
சிலையாகி மெழுகானோம் – இன்னும் என்னெஞ்சு
ஏற்கவில்லை உன் இழப்பை – கனக்கும் என் நெஞ்சின்
சோகம் தனையிறக்க இரங்கல் ஒரு வார்த்தை
உரைக்கத்தான் முடியவில்லை......!
வேதனையால் வெந்த உள்ளம் வெதும்பிச்சிதைகிறது
சிறைக்குள் எனை வைத்து கசக்கிப்பிழிகிறது
– ஆனாலும்
நீ சொன்ன கீதைதான் இனிக்கிறது – அதுவன்றோ
உனை இங்கே வாழவைத்து வாழ்கிறது
தன்மானத் தமிழனை தரணிபோற்றும் தலைவனை
அந்த 'தம்பி'யை நீயும் தரிசிக்க ஆசைகொண்டாய்
மாவீரர் யாரையும் மாண்புடையோராக்கி நின்றாய் – இந்த
மானிலத்தில் தமிழரெல்லாம் வணங்கிட
– வேண்டுமென்றாய்
மூலத்து வேரை அசைத்தே நீயும் மூலமாய் – எம்
வீரரைக் காட்டி விட்டாய்
கீதைக்குப் பெருமைதனை சேர்த்திட்ட பெருந்தகையே
– உன்
கோதைக்கு சோகத்தை சேர்த்ததென்ன?
தானைத்தலைவனை தமிழ்த்தேரில் நீ இருத்தி.

ஆன்மீக வடம் கொண்டு விடுதலைத் தேர் இழுத்தவனே
15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனே! பாதியில் நீ பறந்ததேன்?

கீதையை வாரிக் குடித்துவிட
வைராக்கியத்தோடு புறப்பட்டவனே!
பாதியில் நீ பற்றறுத்து
பரமனடி தேடி சென்று விட்டாய்
கூடித் திரிந்தவன் நான் ...... உன்
சத்தியத்தில் குளித்துவரும்
புன்னகை முகம் தேடித் திரிகிறேன்
நீ அறியாயோ?.....
பூமியில் இன்னும் நம்மிடையே
அற்றுப் போகாதிருக்கின்ற
நல்லியல்புகளின் நீண்டநெடும்
சல்லி வேர்களை
என் கண்களுக்கும் காதுகளுக்கும்
அள்ளி வழங்கியவனே!
நீ நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் உனக்கு மரணமில்லை
மரணத்தால் உன் உயிரைத்தான்
திருட முடிந்ததே தவிர உன்
புன்னகையை அல்ல.....
சுவாசிப்பதால் இரத்தம் சுத்தம்
வாசிப்பதால் மனிதன் சுத்தம் என்ற
தத்துவம் சொன்னவனே! ஒரு
படைப்பாளன் கற்றுக் கொண்டே
இருக்க வேண்டும் என்பதை நான்
உன்னிடம் தான் கற்றுக் கொண்டேன்
இலட்சியங்களை எனக்குள்
விதைத்தவனே!
மனதின் மர்மப் பிரதேசங்களைக் கூட
துழாவித்தொடும் உன் குரல் எங்கே?
பட்டிமன்றத்தால் மக்கள்
மனங்களைக் தொட்டவனே!
வாயைத் திறந்து நீ தொடங்கி விட்டால்
காட்டாற்று வெள்ளமா? இல்லை
உலக சமுத்திரங்களில் கலந்து
நீ தரும் தத்துவங்கள் அத்தனையும்
முத்துக்கள் அவை உன் சொத்துக்கள்
செல்லரித்த வாழ்க்கையின்
வக்கரிப்புக்களை தூக்கி வீசிவிட்டு
நல்லவற்றை மட்டும் எண்ணுபவனே!
அன்பை விதைப்பதிலும்
அதைப் புதுப்பிப்பதிலும்
மனிதர்களை மதிப்பதிலும்
உன் குணம் கண்டு
நிதானம் கண்டு
மயங்கி நின்றவன்நான்
நண்பனே! நண்பனே!
என் இதயக் கூட்டை இன்று
உன் நினைவுகள் அறுக்கின்றன
உறங்கும் போது கூட
வாசிக்க ஏதும் வைத்திருக்கிறோமா?
என்று எண்ணும் பார்த்திபனே!
கீதைக்கு எத்தனை பேர்
உடை மாற்றித் தந்திருக்கிறார்கள் - ஆனால்
உருவத்தையே மாற்றியவன்
நீ மட்டும் தான்
நிகழ்கால வேதங்களில்
விடுதலைக்கு.... அதன் தலைவனுக்கு....
மணிமகுடம் சூட்டியவனே!
முடிந்தது நம்பணி என்று
மடிந்து போனாயா?...... அல்லது
காலத்தின் கரங்கள் உன்னை
கட்டியணைத்துக் கொண்டனவா?
நண்பனே! உன் நினைவுகளோடு....
சாமம்வரை உன் தொலைபேசி ஒலி கேட்டு
சாகாமல் நான் இன்னும் இங்கே.....
நீயில்லாத நாட்களில்
என் நினைவுகள்
கண்ணீரில் கரைகின்றன
இதை நீ அறிவாய்.....
ஆன்மீகம் கற்றுத் தந்தவனே!
உன் ஆத்மா சாந்தியடையட்டும்.

*அன்னாரின் மனைவி, பிள்ளைகள், நண்பர்கள், சுற்றத்தார் அனைவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்*

அன்னாரின் உயிர் நண்பன்
எஸ்.எம். தனபாலன்

TROPICAL
GRILL
TAKE OUT & CATERING
FOR ALL OCCASION
2131 Lawrence Ave, East
Scarborough, ON.
TEL: (416) 757-6327



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று எல்லோருக்கும் இரும்பு இதயம் வேண்டும்

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

மலைசாய்ந்து போனாலும் நிலைசாய்ந்து போகாதே. மலையே விழுந்தாலும் தலையே சும என்ற பழமொழிகளை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றார் அறிஞர் அண்ணா. தமிழர்களின் வாழ்க்கையில் தாக்கங்களும், தவிப்புகளும், அவலங்களும் அதிகமாகிவிட்ட காலம் இது. இந்தக்காலத்திலேதான் தமிழர்கள் தங்களை இரும்பு மனத்தராக்கி வாழப் பழகவேண்டும். துன்பம் என்பது அடுக்கடுக்காகவே வருகிறது. ஆ ஈன மழை பொழிய இல்லம் வீழ அகத்தடியாள் மெய்நோக அடிமைசாக என்று தொடர்ந்து வரும் துன்பங்களைப் பட்டியலிட்டுப் பாடிய ஒரு பாடலும் நம்மிடம் உண்டு. இப்பாடலையும் மிஞ்சிய துன்ப நிகழ்வுகள் இன்று ஏராளம் ஏராளம்.

எனது சொந்த வாழ்க்கையை எண்ணிப்பார்க்கிறேன். என் தந்தை சோமசுந்தரம் ஆசிரியர் அவர்கள் இறந்த போது உண்டான துயரம் என் இதயத்தை இடித்து நொருக்கியது. அதனில் இருந்து மீளப் படாது பாடு பட்டேன். அடுத்ததாக கனடாவுக்கு வந்த ஆத்ம ஜோதி முத்தையா ஐயாவிண் மறைவு என்நெஞ்சைப் பிளந்தது. காலத்தின் ஓட்டத்தால் அக்கவலை யிலிருந்தும் தேறினேன். இப்பொழுது எம்மோடு இணைந்து பழகிய நல் நெஞ்சரான சிந்தனைச் சிற்பி சித்ரா மணாளன் அவர்களின் திடீர் மறைவு இதயத்தை நொருக்கிவிட்டது. என்னைப் போல் பலர் பல்வேறு இழப்புக்களாலும் துன்பங்களாலும் நிலை குலைந்து இருப்பார்கள் என்பதையும் நான் உணர்வேன்.

இந்த நேரத்தில் எந்த மனிதரைப் பார்த்து நாம் ஆறுதல் அடைவது என்ற ஆவல் உண்டாகும். நான் தமிழ் ஈழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களை நினைத்துப் பார்க்கிறேன். அடுக்கடுக்காக எத்தனை தானைத் தளபதிகளை இழந்திருருப்பார். தன்மான மறவர்களை இழந்திருப்பார். அவரும் மனிதர் தானே? அவருக்கும் இதயம் என்ற ஒன்று உண்டுதானே. அந்த இதயம் இத்தனை இழப்புக் களாலும் எந்த நிலையை அடைந்திருக்கும்? வார்த்தைகளுக்குள் வரமுடியாத வதைப்பை அவர் அனுபவித்திருப்பார். ஆனால் அதற்காக அவர் அழுது கொண்டிருக்கவில்லை. கலங்கி மயங்கி நிற்கவில்லை. ஆளுமைகளை அகற்றவில்லை. விரக்தி கொண்டு விட்டு விலகவில்லை. எடுத்த காரியத்தில் வெற்றி அடையும் வரை கலங்காத சோராத இதயத்தை அவர் பெற்றிருக்கிறார். அவருடைய இரும்பைப் போன்ற எதற்கும் அஞ்சாத இதயத்தை நாமும் பெறவேண்டும். இரும்பு நேர் நெஞ்சத்துடன் நமது கடமைகளைச் செய்து நாம் காரிய சித்தி பெறவேண்டும்.

இன்று தமிழர் அனைவருக்கும் இரும்பு இதயம் வேண்டும். இயக்க உணர்வு வேண்டும். இதுவே இன்று முக்கிய தேவையாகும்.

13ஆம் பக்கத் தொடர்ச்சி

கற்பனைக்காய் நீ அதனை வடிக்கவில்லை – அதனை
வெறும் கதை என்று யாரும் ஒதுக்கவில்லை
சொல்லோவியமாய்....... திரண்ட சாரமாய்........
வடித்திட்ட வள்ளலே வாய்திறந்து ஒரு வார்த்தை
பேசுமையா
வதைபடும் என் நெஞ்சிற்கு வருணனாய் நீ வாருமையா
ஐயகோ என்செய்ய எப்படி உனைமறக்க........
சுவையுணவு சுவைக்கவெனில் எனைவிட்டு நீ போகாய்
உனைவிட்டு யான் போகேன்
என்ன கொடுமை இது எப்படித் தணிவேனினி
என் குருவே தருவாயோ "நின்"(ம்) மதியெனக்கு
வருவாயோ எனையாற்ற துயர்தீர்க்க
வருவாயோ எனையாற்ற துயர்தீர்க்க

துடிக்கும் துணைவன்
'இராசமைந்தன்'


# பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும்

பிரதி ஞாயிறு தோறும்
பிற்பகல் 6:00மணிக்கு
இலக்கம் **2191 WARDEN AVENUE**
அறை இலக்கம் 203 இல்
நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு:
புலவர் ஈழத்துச் சிவானந்தன் 438-9171
கந்தையா சந்திரசேகரமுதலி 285-8143




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமை இனிமை மென்மை சித்ரா மணாளன்

**தாட்சாயணி**

அண்ணன் சித்ரா மணாளன் எப்போதும் என் வாழ்வில் எதிர்ப்பட்ட மனிதர் இல்லை. என்னை அவரும், அவரை நானும் அறிந்து கொண்டது அவரவர் எழுத்துக்களினாலேயே. புங்குடுதீவு மண்ணில் பிறந்தவர்கள் என்ற ஒற்றுமை இருப்பினும், இருவரும் நேருக்கு நேராய் நின்று கதைத்ததுமில்லை. ஆனால் அவருடனான சந்திப்பு முதலும் கடைசியுமாக இருக்கும் என்பதனை நான் எதிர்பார்க்கவில்லை. ஏன் அவரின் இயற்கையை இறைவனை அன்றி எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

அண்ணர் என்னுடன் கதைத்த இறுதி வரிகள் என்னிதய சுவர்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. எனக்கும் அவர்க்கும் நிகழ்ந்த உரையாடல் இப்படியாக இருந்தது.

"வணக்கம்" தாட்சாயணி"

"வணக்கம் அண்ணன்"

"நான் சித்ரா மணாளன் கதைக்கிறன் தெரியும் தானே"

"தெரியும் அண்ணே, உங்களைத் தெரியாம"

"உங்கட எழுத்தை படிக்கிறனான். நல்லா இருக்குது. நீங்கள் தொடர்ந்து எழுத வேண்டும். நாங்கள் தொடர்ந்து படிக்க வேண்டும்"

அதுவரை இன்னுமொரு எழுத்தாளனால் நேரடியாக பாராட்டுப் பெறாதவனாக இருந்தவன் நெஞ்சில் இன்பம் துள்ளியது. நெஞ்சு நிறைய "நன்றி அண்ணன்" என்றேன். அவரது நூல் வெளியீட்டிற்குச் சென்றிருந்த போது மேடையில் அவர் கையால் பிரதியை வாங்கும் போது தான் "அண்ணன் நான்தான் தாட்சாயிணி" என்று என்னை நானே அறிமுகப்படுத்தியபோது என்னை கட்டியணைத்தார். நினைத்துப் பார்க்கும் போது நெஞ்சம் பனிக்கும் நினைவுகள் அவை. எளிமையானவர், இனிமையானவர், மென்மையானவர் புரிந்துணர்வு கொண்டவர், இருநண்பர்க் கிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டால் அதனை வெளியிலிருந்து மற்றவர்போல் வேடிக்கை பார்க்காமல், தலையிட்டுத் தீர்த்து வைப்பவர் என்பனவற்றை அவர் நண்பர்கள் மூலமாக அறிந்திட்டபோது ஒரு சிறந்த எழுத்தாளனை, சிறந்த பேச்சாளனை மட்டுமல்ல, மகத்தான மனிதரையும் இழந்துவிட்டு நிற்கின்றோம் என்பது தெளிவு. என் சொந்த வாழ்க்கையில் மாற்றம் கொண்டு வந்தவர் வாழ்வு முடிந்துவிட்டது; அந்த வேதனை, வார்த்தைகளினால் வார்க்க முடியாதது. அவருக்கு நாங்கள் செய்ய வேண்டியது, அவர் விட்டுச் சென்ற எழுத்துப் பணியை எடுத்துச் செல்வதே. அவரின் தமிழீழக் கனவை நிஜமாக்க சித்திரா மணாளனின் ஒரே தலைவனின் தோளை இன்னும் பலமாக்குவோம்.

அங்கமெல்லாம் தங்கமாகும் தங்கமாளிகை
Kanagaambikai
GOLD HOUSE
தரம்! நாணயம்! நம்பிக்கை!
Finest Quality 22K Gold & Singapore Jewellery Gift items, Watches for Sale & Jewellery Repairs
3160 Eglinton Ave.,East, Unit #3,
Scarborough, Ontario, M1J 2H3
Phone: (416) 269-7198

வெளிவந்து விட்டது
சிந்தனைச் சிற்பி சித்ரா மணாளனின்
கருத்து வண்ணம்
"தமிழர் குருஷேத்திரக் கீதை"
இதிகாச உலகில் இது ஒரு புது விதி!
இலக்கிய உலகில் இது ஒரு புதிய போக்கு!
புராண, வேத, சாஸ்திர ஞானத்தின் திருவுரு
அபரஞான, பரஞான, சன்மார்க்கபோதம்
எங்கே கிடைக்கும்?
இங்கு மட்டுமே கிடைக்கும்
ஸ்காபரோ பல்வைத்திய நிலையம்
2155 Lawrence Ave. East, Suite 10
Scarborough, Ontario M1R 5G9
TEL: 416-750-9969

பார்த்துவிட்டீர்களா?
ஒளிவீச்சு
தொடர்புகளுக்கு:
461-5991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் உள்ளம் பூராக நிறைந்திருக்கின்றார் சிந்தனைச் சிற்பி சித்ரா மணாளன்

அதிபர் பொ. கனகசபாபதி
"கல்விச்சபை", ரொறன்ரோ மாவட்டம்

நைஜீரியாவில் தொழில் பார்த்தபொழுது அந்நாட்டு மக்களின் ஒரு பண்பாடு என்னைக் கவர்ந்தது. ஒருவரைச் சந்திக்கின்றபொழுது அவரது சுகசேமங்களை விசாரிப்பதோடு மாத்திரம் விட்டுவிடமாட்டார்கள். வீட்டிலே உள்ள ஒவ்வொருவர் பற்றியும் அக்கறையுடன் விசாரிப்பார்கள். அங்கே ஒரு அந்நியோன்யம் புலப்படும்.

கனடா வந்ததும் அத்தகைய பண்பாளர் ஒருவரை நான் அமரர் S.K. மகேந்திரன் உருவிலே காண முடிந்தது. அவருடைய நட்பு பாசாங்கற்ற இதய பூர்வமான பாசத்தின் புலப்பாடு. அமரர் மகேந்திரனை நான் கனடா வந்தபின்னரே தான் அறிமுகமானேன். குறுகிய காலப் பழக்கம் என்றாலும் மிகவும் நெருக்கமான பிணைப்பு.

எனது அண்ணர் ஈழத்தில் அமரரானதை அறிந்த நண்பர் மகேந்திரன் என் இல்லம் வந்தார். தன்னுடன் சித்திரா மணாளனையும் என் வீட்டிற்கு அழைத்து அறிமுகம் செய்து வைத்தார். பணிவுடமை இன்சொல் அணியுடன் மலர்ச்சியான பெண்மை கலந்த முகம் என்னைக் கவர்ந்தது. அவரது ஆற்றல்கள், ஆழமான புலமை, அனுசரித்துப் போகும் பண்பு, பற்றி அப்போ எனக்குத் தெரியாது. பின்னர் பலபல சந்தர்ப்பங்களிலே அவருடன் பழகும் வாய்ப்பு நிறையவே கிடைத்தது. வியக்க வைத்தது. விகல்பமில்லாத இங்கிதம் நெருங்க வைத்தது. நட்பு என்று சொல்லமாட்டேன். வயது வித்தியாசம். ஏதோ ஒருவிதமான ஆகர்சிப்பு. ஆசிரிய மாணவன் போன்றோ, தந்தை தனயன் போன்றோ, தலைவன் தொண்டன் போன்றோ நெருக்கமான பிணைப்பு எமக்குள் ஏற்பட்டது.

அமரர் மகேந்திரன் மறைந்ததை அறிந்து அவர் இல்லம் சென்றேன். "மாஸ்ரர் அண்ணன் போய்விட்டார் என்று எங்களைவிட்டு விடாதீர்கள்" எனக் கட்டிய ணைத்து கதறினார். எப்படி விடமுடியும், மகேந்திரனின் பிம்பத்தையல்லவா நான் காண்கிறேன்" என்றேன். இறுதிவரை நான் அவரைவிடவில்லை. அவரும் என்னை விடவில்லை. ஆனால் காலன் களவாடி விட்டான். மகேந்திரன் தனியே இருந்து தவிப்பதைக் காணப் பொறுக்காத காலன் அவரை எடுத்துச் சென்றானோ?

ஆழ்ந்த அறிவிலே, செயலாற்றலிலே அவர் ஒரு சாமான்யர் என்ற கணிப்பே ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் அவரது பட்டிமன்றப் பேச்சுக்கள், வானொலி உரைகள், பத்திரிகை கட்டுரைகள் அம்மம்மா இது எப்டிச் சாத்தியம்! என என்னை வியப்பின் எல்லைக்கு எடுத்துச் சென்றன.

எதனையும் புதிய கோணத்தில் பார்க்க வேண்டும் என்ற துறுதுறுப்பு அவரிடத்தில் நிறையவே இருந்தது. பட்டிமன்றங்களுக்கு அவர் தேர்வு செய்யும் தலைப் புக்கள், அவர் எடுத்தியம்பும் வாதம் சாதாரணமாய் மற்றவர்களின் சிந்தனைக்கு எட்டாதவை. அழகு தமிழிலே, தனக்கே உரிய கம்பீரத்துடன், கணீர்க்குரலில் அடுக்கடுக்காய் அவர் வைக்கும் வாதங்கள் கேட்போரை புளகாங்கிதம் அடையச் செய்யுமென்றால் அது மிகையான கூற்று அல்ல.

அமரர் சித்திரா மணாளனுடைய "தமிழர் குருஷேத்திரக் கீதை" ஒரு அற்புத படைப்பு. எமது தாயக மீட்புப் போராட்டத்தில் உள்ள ஈடுபாடு, பகவத்கீதையைத் துல்லியமாக கற்றுணர்ந்த சமய அறிவு, பண்டைய இன்றைய இலக்கியங்களை கற்றறிந்ததால் பெற்ற பேரறிவு, சமகாலப் பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் வரும் செய்திகள் துணுக்குகள் யாவையையும் வாசித்த மையால் ஏற்பட்ட பரந்த பார்வை என யாவுமே "தமிழர் குருஷேத்திரக் கீதையில்" புகுந்துள்ளமையால் அதனைக் காலத்தால் அழியாத நூலாக்கியதுடன் சித்திரா மணாளனை தமிழ் இலக்கிய கர்த்தாக்களில் தலை சிறந்தவர்களில் ஒருவராக நிற்க வைத்துள்ளது. தலைவர் பிரபாகரன் எல்லோரது நன்மதிப்பையும் பெற்ற பெருமகன். அவரைச் சப்பந்தப்படுத்தி ஒரு புதினம் வரைகின்ற பொழுது சில கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம். இன்னும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே நண்பர் சித்திரா மணாளன் கத்திமுனையிலே நடப்பது போலவே இதனை எழுதியுள்ளார். வேறுபலர் இம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால் தோல்வி அடைந் திருப்பார்கள். ஆனால் சித்திரா மணாளன் மகோன்னத வெற்றி ஈட்டி உள்ளார். காரணம் அவர் கர்ம வீரர். இதய சுத்தியோடு ஈடுபட்டார். வெற்றியும் ஈட்டினார். நமக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. முழுமை யாகக் குருஷேத்திரக் கீதையைக் காண முடியவில்லை.

சித்திரா மணாளன் மறைந்துவிட்டார். ஆனால் அவர் இருந்திருந்தால்?" என்று எம்போன்றோர் பலர் நாளாந்தம் ஏங்குகிறார்களே, அது சித்திரா மணாளனின் வெற்றி. நிறையவே சாதிக்க வேண்டியவர், குறைந்த காலம் வாழ்ந்தாலும் எம் உள்ளம் பூரா நிறைந்து நிற்கின்றார் எனக் கூறிச் சாந்தி பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக அலை ஓய்ந்ததா?

விரிவுரையாளர் எஸ். பத்மநாதன்

தமிழறிவும், ஆன்மீகப் பற்றும் நிறைந்த சிந்தனையாளனாய், பல நூல்கள் படித்து அதன் சாரம் பெற்று எழுத்திலே வடிக்கும் எழுத்தாளனாய், தான் சிந்தித்தவைகளைத் தன் நா அசைவினால் உரையாற்றும் கீதை உபதேசகனாய், எதனையும் சாதிக்கும் ஓர்மம் மிக்கவனாய், சமூக மொழிப்பற்றினை எந்நேரமும் சுமந்து நின்ற தமிழ் ஊழியனாய் விளங்கிய சித்ராமணாளன் இன்று நம்மிடையே இல்லை என்னும்போது கண்களில் நீர்முட்டிச் சிதறுகின்றது. இதயம் விம்முகின்றது. உடல் ஒரு கணம் ஜீவகளை அற்றுப் போகின்றது.

சித்திரா என்னும் தன் மனைவியின் பெயரை இணைத்து சித்திராமணாளன் என்ற புனைபெயருக்குள் தன்னை அடக்கிக் கொண்ட இவரது இயற்பெயர் சிறிஸ்கந்தராஜா என்பதாகும். இவர் புங்குடுதீவு 7ம் வட்டாரம் ஊரைதீவைச் சேர்ந்த கந்தையா - சீதாலெட்சுமி தம்பதிகளின் புத்திரனாகப் பிறந்தவர். இளம் வயதிலேயே தமிழ் உணர்வும், மண்ணின் பற்றும் நிறைந்த இவர் அமரரான சட்டத்தரணி எஸ்.கே.மகேந்திரன், புலவர் ஈழத்துச்சிவானந்தன் போன்றவர்களின் வழிநடத்தலில் வாழ்ந்தமையால் சேவையுணர்வுடன் கூடிய இளம் தொண்டராக விளங்கினார்.

சிறிய வயதிலே வர்த்தக நகரங்களை நோக்கிச் சென்ற அவரது கிராமத்து இளைஞர்களுள் வித்தியாசமானவராகத் திகழ்ந்த இவர் சொந்தக் கிராமத்து அறவழி நிலையங்களில் ஈடுபட்டு வந்ததுடன் எஸ். கே. மகேந்திரனின் அறிவகம் என்னும் நூல் நிலையத்தினை பயன்படுத்தியும் வந்துள்ளார். 1965ல் ஊரைதீவு இளந்தமிழர் மன்றத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட இவர் எஸ்.கே. யின் பேச்சாற்றலில் உணர்வு கொண்டு அவர்பின் நடந்தார். இவ்வாறான சொந்த மண்ணின் இலக்கிய, அறிவுச் சூழல் இவரைப் பின்பு சிறந்த சிந்தனையாளராக மாற்ற உதவியுள்ளது எனலாம்.

சொந்தக் கிராமத்தில் கமலாம்பிகை வித்தியாசாலையிலும் பின்னர் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்று சமூக சேவை செய்து வந்துள்ள இவருக்கு நல்ல நண்பர்கள் கிடைத்தமையும் பல்வேறு திறன் கொண்ட வளர்ச்சிக்கு உதவியுள்ளது. பேச்சாற்றல், எழுத்தாற்றல் என்பனவற்றினை ஊக்குவிப்பதில் எம். தனபாலன், ஆர். ஆர். பிரபா, அ. சண்முகநாதன் போன்றவர்கள் உதவியுள்ளார்கள். மிகுந்த ஒற்றுமையுடன் மண்ணின் பற்றுடன் வாழ்ந்த குடும்ப உறவுமுறை இவர் காலத்தில் சிறப்பாக இருந்தமையால் ஒரு அறிவுப் பாரம்பரியமே உருவாகியுள்ளது. நாட்டின் சூழ்நிலை காரணமாக 1979ல் ஜேர்மனி சென்று மீண்டும் 1984இல் தனது திருமணம் காரணமாக தமிழீழம் சென்றார். 1985இல் மீண்டும் டென்மார்க் சென்று குடியேறினார்.

1985 தொடக்கம் 1994 வரையில் ஒரு ஒன்பது வருடங்களாக டென்மார்க்கில் வாழ்ந்த வேளையில் தமிழர்கள் குறைவாக வாழ்ந்து வரும் அந்த நாட்டில் முழுமையான அவரது திறன்களை வெளிப்படுத்த முடியவில்லை. எனினும் ஞானதீபம் என்னும் சஞ்சிகை நடத்தி வந்துள்ளார். வெளிநாட்டு வாழ்வில் இந்துக்கள் சமயம் மாறி வருவது கண்டு மனம் பொறுக்க முடியாத சூழ்நிலையில் அவரால் நடத்தப்பட்டதே ஞானதீபம் என்னும் சஞ்சிகையாகும். அவரது திறன்களை அறிந்த பல அறிஞர்கள் தூர இடங்களிலிருந்து வந்து அவரை அழைத்துச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது. வில்லுப்பாட்டு, நாடகம், பட்டிமன்றம் போன்ற பல நிகழ்வுகளில் அவர் பங்கெடுத்து சிறப்பாக செய்துள்ளார். பணம் தேடும் நோக்கில் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்தவர் மத்தியில் இவர் வித்தியாசமானவர். எந்நேரமும் நூல்களை வாசித்தல், அது பற்றி சிந்தித்தல், சமூக நிகழ்வுகளில் பங்கு கொள்ளுதல் தவிர வேறொன்றினையும் அறிந்திராதவர்.

1994இல் கனடாவில் தன் வாழ்வினை புதிய நோக்கில் ஆரம்பித்த இவருக்கு மீண்டும் பழைய நண்பர்கள் வழிகாட்டிகள் தமிழ் நெஞ்சங்கள் தொடர்பு ஏற்பட்டது. ஆழமான தமிழ்ப்பற்றுடன் ஆன்மீக உணர்வுடன் இங்கு வந்த வேளையில் இங்குள்ள வேலைப்பழுவும் காலநிலையும், இயந்திரமயமான வாழ்வும் சற்று நிலைகுலைய வைத்தாலும் மீண்டும் விழித்தெழுந்தார். நிறைய புதுப்பிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை எஸ்.கே. மகேந்திரன் மீண்டும் வழங்கினார். அவரால் உருவாக்கப் பட்ட அனைத்துலக மனிதகலாசாரப் பேரவையில் பிரசார குழு இணைப்பாளராக செயற்பட்டு பல அரிய சேவைகளை ஆற்றினார். குறிப்பாக எஸ்.கே. மகேந்திரனின் “என்று முடியும் எங்கள் போட்டிகள்” மண்மாருதம் சீ.டி வெளியீடு என்பவற்றில் நிறையவே பங்களிப்பு செய்தார். தனது சொந்த வேலை போன்று இவற்றினை செய்து தனது 21 வருட கால நட்புக்கு இலக்கணமானார். மேற்படி நூலில் தனது வெளியீட்டுரையில் அவர் எழுதிய எழுத்துக்கள் இன்றும் என் மனக்கண்முன் வருகிறது. இந்நூல் சாத்தான் ஓதிய வேதம் அல்ல. இது விசுவாமித்திரரின் மனவளத்தோடு வழங்கப்பட்ட தசரத மைந்தர் சரித்திரம். இது விதுரன் யாத்த பாண்டவர் புகழோவியம் அல்ல. அனுமானும் அணிலும் வரைந்திட்ட இராமகாவியம். இது ஏகலைவன் வார்த்த துரோண காவியம் மட்டுமல்ல இலட்சுமணன் சுமந்திட்ட இராம காவியம் கூட என்ற வரிகளில் உள்ள வலிமையும் படிப்பாற்றலும் பரந்த தெளிந்த சிந்தனையும் அவரைப் பற்றி மேலும் அறியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டியது. பல்வேறு தொடர்புகள் மூலம் எனக்கு அறிமுகமாகிய சித்ரா மணாளனின் திறன் என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

எழுத்தாளனாக சொற்பொழிவாளனாக விளங்கி வந்துள்ள சித்திரா மணாளன் சிறந்த ஒருங்கிணைப்பாளர் என்பதனை அவர் செய்து காட்டிய பல விழா நிகழ்வுகள் சான்று கூறுவன. அத்துடன் தொடர்ந்தும் பல நூல்களை வாசித்தும் பட்டிமன்றம் கலந்துரையாடல்களில் பங்குபற்றியும் வந்த வேளையில் எஸ்.கே.மகேந்திரனின் இழப்பு அவரை பெரும் வேதனைக்கு உட்படுத்திவிட்டது. 21 வருடங்களாக வழிகாட்டியாகவும், தமிழ் ஆசானாகவும் விளங்கிய எஸ்.கே.மகேந்திரன் அவரது மைத்துனர் என்ற நிலயில் விளங்கியவர் மட்டுமல்ல சிறந்த தோழமையுடன் கூடிய நண்பனாகவே உணரப்பட்டிருந்தார். இந்த உரிமையினால் சத்தியா நூலகம் என்னும் பெயர் தாங்கிய எஸ்.கே. யின் நூலகத்தில் மீண்டும் தன்னை இணைத்துக் கொண்டார்.

சித்ராமணாளன் தன்னை கீதையின் ஆய்வாளனாக மாற்றிக் கொண்ட வேளையில் அவரது சிந்தனையில் புதிய திருப்பம் நிகழ்ந்தது. கீதவாணி ஒலிபரப்பு மூலம் கீதை பற்றிய பல உரைகளை நிகழ்த்தி தனது அறிவினை மேலும் வளப்படுத்திக்கொண்டார். இவ்வேளையில் ஈழநாடு பத்திரிகை அவரது எழுத்துக்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தது. ரீ. கே. பரமேஸ்வரன் பல நூல்களை அவருக்கு வழங்கி உதவியதுடன் எழுதவும் தூண்டி வந்துள்ளார். அத்துடன் பல நூல்களை தேடிப் பெற்றும் படித்தும் தமிழர் குருஷேத்திர கீதையினை தொடர்ந்தும் ஈழநாட்டில் எழுதலானார்.

கட்டுரைகள் எழுதுகின்ற வேளைகள் தவிர புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரின் பூவரசம் பொழுது என்னும் விழாவின் இணைப்பாளராக தொகுப்பாளராக சேவை புரிந்துள்ளார். தமிழ் மக்கள் மத்தியில் மிகச் சிறந்த விழாவாக பூவரசம்பொழுது மலர்ந்த வேளையில் பல விழாக்கள் விழித்துக் கொண்டன. அறிவு, அடக்கம், ஆற்றல் கொண்ட அமைதியான விழாவாக இது நிகழ்ந்தமைக்கு இவரது பல பணிகள் உதவின என்று தலைவர் எம். தனபாலன் அடிக்கடி கூறுவார். அத்துடன் ஆதி அருள் நெறி மன்றத்தின் தமிழ்மகள் என்னும் சமய மாதசஞ்சிகையில் உதவி ஆசிரியராகவும் கடமை புரிந்து பல அரிய கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். இவரது இனிய சுபாவம் பலரையும் ஈர்த்துக் கொண்டது.

கனடிய மண்ணில் இவரது உயர்ந்த சிந்தனை பணி என்பது இவரது ஆன்மீக அலைகள் என்னும் ஒலித்தட்டு மூலம் வெளியாகியது. மகன் தந்தைக்காற்றும் உதவி என்பதற்கு இணங்க தனது காலம் சென்ற தந்தையாரின் நினைவுக்காக புலவர் ஈழத்துச்சிவானந்தனின் குரல் வளத்தினூடாக வெளியிட்டதே ஆன்மீக அலைகளாகும். இது வரை யாரும் செய்திருக்காத அளவில் மிகுந்த பொருட்செலவில் தனியாக முயன்று இவர் வெளியிட்ட ஆன்மீக அலைகள் உலகின் தமிழர் வானொலியின் மூலம் ஒலித்து வருகின்றது. இவரது வாழ்நாளில் இவர் செய்த நிலையான ஒரு ஆன்மீகப் பணியாகவே இதனைக் கொள்ளலாம்.

இறுதியாக இவரது தமிழர் குருஷேத்திரக் கீதை நூல் வெளியான போதுதான் தமிழுலகம் மிகவும் விழித்துக் கொண்டது. ஈழநாடு பத்திரிகையில் இவர் கட்டுரைகளை எழுதத் தொடங்கிய காலம் முதல் இவரது ஆற்றல் வெளிப்பட ஆரம்பித்தது. பல்வேறு சமய, வரலாற்று இலக்கிய நூல்களை படித்து அவற்றினை எழுத்தில் புகுத்தி அதனை தமிழர் குருஷேத்திரக்கீதை என்ற புதிய சிந்தனையுடன் வெளியிடப்பட்ட வேளையில் பல உணர்வுகள் தூண்டப்பட்டன. இவரது ஆன்மீகப் பார்வையில் சிங்களவர்களையும் தமிழர்களையும் கௌரவ பாண்டவர்களாகவும் மேதகு பிரபாகரன் அவர்களை அர்ச்சுனனாகவும் படைத்து தமிழ்ஞானி பாத்திரத்தில், கிருஷ்ணரையும் நிலையப்படுத்தி முழு உபதேசமும் தமிழரின் போராட்ட வரலாற்றினை நெறிப்படுத்திக் காட்டும் புதிய சிந்தனை வடிவமாயிற்று.

ஈழத்தமிழர்கள் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ வேண்டும். எதிர்காலச் சந்ததி சுதந்திர மனிதர்களாக வேண்டும் என்பது தான் இவரது நூலின் மிகப் பெரிய இலட்சியமாக இருந்தது. இதனால் தான் இவரது நூலுக்கு முன்னுரை எழுதிய கமலா பெரிய தம்பி அவர்கள் கனடாவின் எழுத்துலக வானிலே சுடர்விடும் உதயதாரகை, தமது வித்தியாசமான இலக்கிய ஆக்கத்தால் சாதனை படைத்துவரும் நல்ல தரமான எழுத்தாளர் என்று குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் கந்தவனம் அவர்கள் கூறியது போன்று பொறுப்பு வாய்ந்த படைப்பாளியாகவும், தமிழர் தகவல் ஆசிரியர் எஸ்.தி. குறிப்பிடுவது போன்று ஓய்வின்றி எழுதிய எழுத்தாளராகவும் விளங்கிய சித்திரா மணாளன் இளவயதிலேயே மரணித்துப்போன நல்ல ஒரு சிந்தனையாளர். பொங்கும் தமிழில் அரசியல் ஆன்மீகம் என அள்ளித் தந்த அட்சய பாத்திரம் ஓய்விலாது எழுதி பேசி இனப்பணி புரிந்த சேவையாளர்.

ஞானதீபம், தமிழ் மகள் போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியராக மண்மாருதம் படைத்த உரையாளனாக, ஆன்மீக அலைகளின் வெளியீட்டாளராக, பூவரசம் பொழுதுகளின் விழுதுகளாக, பட்டிமன்றங்களில் திகட்டாத சொற்பொழிவாளராக, தமிழர் குருஷேத்திரக்கீதையின் சிந்தனை வெளிப்பாட்டாளனாக திகழ்ந்த சித்திரா மணாளனும் உயர்ந்தோர் மரணம் என்ற வகையில் அடக்கப்பட வேண்டியவர். நந்தா விளக்கின் சுவாலையுடன் அவர் மரணிக்கவில்லை. அவர் மடியும் போது நாம் அழவேண்டியதில்லை. அவரது தலை முறையில் நாம் வாழ்ந்தமைக்காக மகிழ்ச்சி அடைய வேண்டும். எங்கள் கண்ணீரைத் துடைத்து அவரது ஆன்மீக அலைகளில் முழுகுவோம் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்ரா மணாளனே சிந்தனைச் செம்மலே!

சித்ரா மணாளச் சிந்தனைச் செம்மலே!
காலையில் தோன்றிய சூரியனை போன்றவா - நீ
மாலை வரை வரவேண்டாம்
மதியம் வரையாவது வா!
மதியம் ஆக முன்பே
காலை வாரிப் போனதென்ன
காலத்தின் விளைவோ - இல்லை
காலதேவனின் கட்டாயமோ
தமிழர் குருஷேத்திர நூலை
தமிழராம் எங்கள் கையில் தந்துவிட்டு - உன்
கதையை மட்டும் முடித்த காரணம் என்ன?
உன் நூல்வெளியீட்டினில் உரையாற்றினாய்
- கேட்டோம்
உணர்ச்சிவசமாயிருந்து உன் நூலை எடுத்துப்
- போய்
உன் முகவுரையைப் படித்து முடிக்க முன்பே
உன் முகத்தை மறைத்த விந்தை என்ன!
விண்ணை அடைவதென்ன உனக்கு
விளையாட்டாய்ப் போச்சா?
பச்சை உடம்புகளை வெட்டி
பாரதப்போரில் அணையாகக் கட்டு என்று
பரமாத்மா சொன்னதைப் படித்து
நிச்சயம் சரி என்று நம்பியவனாச்சே நீ!
கண்ண பரமாத்மா கீதையுடன் மேதகு
தலைவர் பிரபாகரச் சூரியனை
இணைத்து உண்மையை எழுத்துருவில் தந்த
விண்ணன் அல்லவா நீ - நீ
சித்திரா மணாளனே அல்ல குருஷேத்திரப்
புத்ரா மணாளன் நீ
ஆன்மீகத்தின் அற்புத தர்மத்தை
தமிழீழ அரசியற் போரில் ஆய்ந்த
குப்தன் அல்லவா நீ
கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்ற
கண்ணனின் உபதேசக் கருத்தில் ஒருமித்து
திடமுடன் ஒரு நூலாகத் தந்தவனே
தமிழர்க்கு நீயும் ஒரு தம்பியடா!
நூல் பல வரலாம் இதுபோல் நூல் இனி வருமா?
பரந்தன். கிளிநொச்சி குருஷேத்திர விளைவுகளை
அறிந்த மகிழ்ச்சியிலா உன் இதயம் நின்று போனது?
மானிட ஆன்மாதான் மரணம் எய்தாது - நீ
மானிடனே அல்ல மகாத்மா!
மக்கள் மத்தியில் தான் நீ மரணித்து விட்டாய்
மகாத்மாக்கள் மத்தியில் நீ
மரணத்தை வென்ற மறுபிறவி!
கறைபடா உன் கடமையை மெச்சியே
கண்ணன் பரமாத்மா காண விரைந்தழைத்தார் போலும்

மானசீகமான தமிழ்மணாளனே
ஆழமான உன் தாயக நேசம்
கூடுமானவரை கூடிய சீக்கிரம்
தமிழீழமாக இத்தலை முறைவெல்லும்
வாழ்வைத் துறந்தவனான உன் ஆத்மா
ஆழத் துயில்கையில் அமைதி கொள் என
ஈழத்தை நேசிக்கும் தமிழர் யாவரும்
உன்னையும் போற்றி இறைவனை வேண்டுவர்.

சிவா. சின்னத்தம்பி

# மூச்சு விடும் போதும் புலி நினைப்பில் விடுத்த வேந்தே

மயக்கமுறும் மனவுணர்வை மடியச் செய்து
மனந்திருந்தும் கீதையினால் புலியைப் பாடி
இயக்கமுறும் சோதனையும் இடரும் பேசி
இத்தனைநாள் எழுதியகை எங்கே? முல்லை
தயக்கமுறும் தென்றலினால் தடவும் போதில்
தளிராடி இலையாடித் தவித்தல் போல
நயக்கமுறும் சிரிப்பாலே நம்மை வென்ற
நளின இதழ் இரண்டுமது எங்கே? எங்கே?

பேச்சினிலே கனிவிருக்கும் பேதம் பேசும்
பிரச்சனைகள் இருக்காது பெரிய பந்தா
கூச்சமெலாம் இல்லையெனச் சொன்னால் கூட
குறைகண்ட இடமெல்லாம் குனிந்து போகா
வீச்சரிவாள் வெம்புலியின் தொண்டன் மூச்சு
விடும்போதும் புலிநினைப்பில் விடுத்த வேந்தன்
ஆச்சரியம் அன்றோ அடங்கி னானாம்
அரியசெயல் எதுவேண்டும் அவனுக்கின்னும்?

கொலைக்கருவி ஒன்றே தான் கூட்டும் வெற்றி
குனியாதே நிமிர்ந்திடுக கண்ணன் சொன்னான்
கலைக்கருவி களியாட்டம் வேண்டாம் யுத்தம்
காக்கட்டும் வெறியாட்டம் ஆடு என்றாள்
முலைக்கருவி அறுப்பேன்என் மகன் முதுகுகண்டால்
முன்பொருதாய் போல் முழுவீரம் காட்ட
அலைக்கருவி நீரினிலே அணைந்தான் எம் அண்ணன்
ஆண்டவனின் திருவடியில் அவன்தினமும் வாழி

- இரா. சம்பந்தன்

"ஈழநாடு" இதழில் வெளியான கட்டுரையையும், கவிதைகளையும் தமிழ் மகளில் ஆவணப்படுத்தியுள்ளோம். அவ்விதழுக்கு எமது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்பாதி பெண்பாதி என்ற சமத்துவத்தை தன் வாழ்வில் நிறுவியவர் சித்ரா மணாளன்

அமிர்த முருகதாசன்

*செயலாளர் கனடா சைவநெறித் தொண்டர் கழகம்*

1-10-98 அன்று காலை 8 மணியளவில் எனது இல்லத்தில் ஒலித்த தொலைபேசி ஓர் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. மதிப்பிற்குரிய மாமனிதர் "சிந்தனைச் சிற்பி சித்திரா மணாளன் மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டதும், அது ஓர் வதந்தியாக இருக்கக் கூடாதா என்ற எண்ணம் தோன்ற மனம் பலவாறாகச் சிந்தித்தது. நேற்றுவரை மேடைகள் தோறும் முழங்கிய மனிதன் இன்று எம்மிடையே இல்லையா? இறைவா இது என்ன மாயை உலகம். இவ்வாறு எண்ணிய மனது இத்தகவல் ஏன் பொய்யாக இருகக்கூடாது என்ற நப்பாசையில் புலவர் சிவானந்தன் ஐயாவின் இலக்கங்களை அழுத்தினேன். மறுமுனையில் தளதளத்த குரலில் கலோ என்றார் வெள்ளி நாக்கு நாவலர். எப்படி மணாளன் மறைந்து விட்டாரா என்று கேட்பது என்ற தடுமாற்றத்தில் என்ன விசேடம் ஐயா என்றேன். கம்பீரமான நாவன்மை உள்ள பெருமனிதர் தம்பி சித்திரா மணாளன் நம்மையெல்லாம் விட்டுச் சென்றுவிட்டார் என்ற கலங்கிய வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

சித்திரா மணாளன் ஒரு மிகச் சிறந்த எழுத்தாளர் "சிந்தனைச் சிற்பி" என்பதை இந்த சைவத் தமிழ் உலகமே உணர்ந்திருந்தது. அவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தமிழர் குருஷேத்திர கீதை என்ற தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தின் தருமத்தை எடுத்துக்காட்டும் நீதி நூலை இயற்றி அதற்கு கீதையின் மெருகூட்டினார். எதிலும் அவசரப்படாத சிந்தனையாளர் அந்த நூலை விரைவில் வெளியிட வேண்டும் என்று அக்கறையும் அவசரமுமாக இருந்தார். நூல் வெளியிட்டு நான்கு நாட்கள் ஆகவில்லை இந்தத் தரணியெல்லாம் வாழும் ஈழத்தமிழ் மக்கள் எல்லாம் வாழ்த்தி வணங்க வேண்டிய மாபெரும் மனிதர் வணக்கத்திற்கே உரியவராக வானுலகம் புகுந்துவிட்டார். எங்கு காண்போம் இப்படி ஒரு நண்பரை எப்படி ஆறுதல் கொள்வோம். எவரளிப்பார் இவர் தந்த அரும்பெரும் கருத்துச் செல்வங்களை.

சித்திரா மணாளன் எந்த விடயத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்றாலும் எழுத வேண்டும் என்றாலும் அதைப்பறி நன்றாக ஆராய்ச்சி செய்வார். பட்டி மன்றங்களில் தன்னுடைய ஆராய்ச்சிகளை ஆதாரங்களுடன் தன்னுடைய கம்பீரமான நாவன்மையால் உறுதிப்படுத்துவார். இவரைப் போன்றவர்களை ஆய்ந்த நாவலர் என்று நமது முன்னோர்கள் கூறுவர். வெறும் நாவன்மையை வைத்துக் கொண்டு தாம் பெரிய அறிவாளிகள் என்று வாழ்கின்ற மக்கள் மத்தியில் சிந்தனைச் சிற்பி அவற்றுக்கு விதிவிலக்காக வாழ்ந்தார். அடக்கமான வாழ்வு, அமைதியான குணம் எவரையும் அவமதிக்காத திறன், தமிழ் மீதும் தமிழ் இனத்தின் மீதும் தீராத பற்று, ஆழ்ந்த சமய அறிவு, மாசற்ற பக்தி, பெரியோர்கள் இடத்திலே பணிவு இவற்றுக் கெல்லாம் ஒரே உருவாய் எமக்கு இறைவன் அளித்த ஞானியே இந்த சித்திரா மணாளன்.

அமரர் எஸ்.கே. மகேந்திரன் மிஸிசாகாவில் நடைபெற்ற கண்ணதாசனைக் கண்டேன் நூல் வெளியீட்டு விழாவில் புலவரே தனக்கு தமிழ் வழிகாட்டி என்று பேசினார் சித்திரா மணாளன் மகேந்திரனையும் சைவத்தமிழ் உலகின் தூண் ஆகவும் வழிகாட்டியாகவும் துலங்கும் புலவர் ஐயாவையும் தனது வழிகாட்டிகள் என்று பேசியதோடு கட்டுரைகளிலும் எழுதியுள்ளார். இவரின் பண்பு பின்பற்றப்பட வேண்டிய பண்பாகும்.

எவ்வளவு காலம் வாழ்கின்றோம் என்பது முக்கியமல்ல எப்படி வாழ்கிறோம் என்பதுதான் முக்கியம் என்பதை எமக்கு உணர்த்திய பெரியோர்களின் வரிசையில் சித்திரா மணாளனும் ஓர் நீங்காத இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

இவரது பிரிவை இட்டு ஆறாத்துயர் அடைந்த எமது கழகத் தலைவர் இராமலிங்கம் இரகுநாதன் அவர்கள், கழகத்தின் சார்பிலும் தனது சார்பிலும் சிந்தனைச் சிற்பியின் மனைவி, மகள், மகன் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டார்.

சித்திரா மணாளன் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் என்பதோடு மட்டுமல்ல சிறந்த சமய வாழ்வு வாழ்ந்தவர் அவர் தனது துணைவியில் கொண்ட காதலால் சித்திரா மணாளன் என்ற நாமத்தைச் சூடிக் கொண்டார். இந்துக்களின் இல்லற தர்மமாகிய ஆண்பாதி பெண்பாதி என்ற சமத்துவ தத்துவத்தை இவரது இந்த நாமம் எல்லோரையும் உணரச் செய்துவிடும். இளம் வயதிலேயே இவரை இழந்த இவரது துணைவியையும் குழந்தைகளையும் இவரது ஆன்மா துணையாக இருந்து காத்தருள வேண்டும் என்று எல்லாம் வல்ல கௌரிநாயகி சமேத திருக்கேதீஸ்வரப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டிக்கொள்கின்றேன்.

"இந்த மனிதனின் புகழ் மரணத்தால் மறைக்கப்பட முடியாதது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பாடிய மாவீரனே!

சித்ரா மணாளனே சித்தம் உவந்தோ
நித்ராதேவியின் தஞ்சம் பெற்றீர்
நிரந்தர சுகம்பெறும் வழியைத் தேடி
நித்யானந்த நீள்துயில் கொண்டீர்
நின் புரட்சிச் சிந்தையுள் எம்போர்க் களம்
புதியதோர் கீதை விளக்கம் தந்தது

குரு ஷேத்திரக்கீதைக்கு ஒப்பீடு தமிழர்
பெருமைக்காய் போராடும் போராளிக் கூட்டம்
போதகர் ஞானமும் போர்க்கள அறிவும்
போட்டியில் வளர்ந்து சிந்தையில் துளிர்த்த
தத்துவக் கருத்துக்கள் ஞானிகள் சான்றுடன்
மெத்தென விரிந்து மேன்மையாய் நிற்கும்

வரம்பெற்றார் போர்வீரர் ஆன்மீகப் பாதையில்
பரம்பொருளே கையேற்றார் மாவீரர்
-உயிர்தன்னையே
கரங் குவித்துப் போற்றும் கருத்துப்பல தந்தீர்
மரம் போன்ற நெஞ்சங்கள் மரத்து விட்ட போதும்
உரங்கொண்ட உன் சொற்கள் உன் வேள்வித்தீயில்
அரங்கொண்டு அறுக்குமடா ஆகுதியில் ஆகுமடா

கீதையல்லக் குறளே தற்கால தேவையெனும்
பேதையர் இரண்டுமே அறியார் எனக் கவன்றீர்
மேய்ந்தார் நுனிப்புல்லை மேவார்தாம் நாணி
வாய்பொத்தி நிற்க வரைந்து விடு தாயே!
நோய் அகலட்டும் என்றீரா சோம்பல் தான்
ஆய்வு செய்யும் ஆர்வம் நின்மறைவில்
- தோன்றியதோ

புத்தக வெயிடு பிரசவ வேதனையாம்
நித்திரையின்றித் தலைவன் புகழ் பாடி
வித்தகர் மத்தியில் விருது பெற்(று) ஓய்வதன்முன்
மார்போடும் நெஞ்சோடும் போர்க்கள மாடிய
மாவீரனே போய் வா! கண்ணீரால் விடை தந்தோம்
போய் வா மகனே ! எழுத்தாற்றல் ஓய்ந்ததோ
- குறமகள்.

# சித்ரா மணாளனுக்கு கண்ணீர் அஞ்சலி

பார்பூக்கும் வேளையிலே கார்மேக இருள்
- வந்தது போல்
சீர்பூத்த சித்திராமணாளன் சிதைந்த செய்தி கேட்டு
நீர்ஊற்றி வளர்த்த செடி நிலைகுலைந்து போகக் -
- கண்டு தமிழ்நெஞ்சங்கள்
சோர்வுற்று இருக்க வைத்து தொலைதூரம்
-போய்விட்டீரே

களமேவு புலிகளுக்கு தளம் போன்றது உன்பேனா
தயங்காமல் தளராமல் வரைந்தவையை என் -
- செய்வோம்!
தலைவனுக்காய் நீ படைத்த கீதையதை
- தவழவிட்டு!
கற்பனைக்கே எட்டாத களம் பார்த்து நீயேன்
-சென்றாயோ!
தீபம் 98 இல் நீ தந்த சொற் போராடல் எம்
-நெஞ்சில்
தீபம் 99 இல் இன்னும் பல உன்னிடத்தில் பெற
-இருந்தோம்
தீயநோய் ஒன்று திகைப்படைய வைக்குமென்று
யார் தான் எதிர்பார்த்தார்?
தீபமாய் நீயென்றும் எம் நினைவில் திகழ வேண்டும்
-ஐயா!
ஆற்றொணா உன்துயரில் துவளும் உன்இனிய
துணைவிக்கும் அன்போடு உன் அணைப்பை
அகலத் திறந்து பரிதவிக்கும் பாலகர்க்கும்
-பண்புடன் நீ திகழ வழி
அமைத்த பெற்றோர்க்கும் உற்றார்க்கும் எங்கள்
-கண்ணீர்
அஞ்சலியால் ஆறுதல் பகர்கின்றோம்
சித்திரா மணாளனே! உனது ஆத்மா சாந்திபெறுக!

இவ்வண்ணம்
கனடா வாழ் நயினாதீவு மக்கள் சார்பாக
நயினாதீவு - கனேடியர் அபிவிருத்திச் சங்கம்
ரொறன்ரோ - கனடா

**NATHAN SRITHARAN**
(Barister & Solicitor, Notary Public)
Real Estate, Family, Immigration
நாதன் சிறிதரன்
கனேடிய சட்டத்தரணி
2190 WARDEN AVENUE, SUITE 206
SCARBOROUGH, ON. MIT 1W6
(Warden & Sheppard)
Tel: (416)499-2760 Fax: (416)499-6534

**"தமிழ் மகள்" இதழ்**
உங்களுக்குக் கிடைக்கவில்லையா..!!
யோசிக்க வேண்டாம்
இதோ ஒரு வழி
டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்களின்
ஸ்காபுரோ பல் வைத்திய நிலையத்தில்
பெற்றுக் கொள்ளலாம்
2155 Lawrence Ave. East
Scarborough, Ont.
லோறன்ஸ் & பேர்ச்மௌண்ட் சந்திப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைச் சிற்பியே! சித்ராமணாளனே!!

ஆன்மீகத்தோடு மறத்தமிழ் புகழ்பாடிய புரட்சியாளனே
அனைவருக்கும் ஒளிதரும் அறிவாய் ஓங்கிய
சிந்தனைச் சிற்பியே! சித்திராமணாளனே!!
சீரியநற் பண்பாளனே! சிந்திக்கவில்லையா
குறுகிய காலத்துக்குள் கூற்றுவன் குறுக்கிடுவானென்று
குன்றாத நின்தமிழ் சிந்தனையை அலைகடலுக்கப்பாலும்
அள்ளிப் பருகிட ஆர்வமுடன் காத்திருந்தோம்
காலன் கடுகதியில் கயிறெறிந்ததேனய்யா!

தன்னிகரில்லாத் தலைவனை காப்பியத் தலைவனாக்கி
தமிழர் குருஷேத்திரக்கீதையை தரணிக்களித்த பெருமை - ஒன்றே
தமிழ்த் தாய்க்கு போதுமென்றா சீக்கிரமே சென்றாய்!
தமிழீழக் காவியத்தில் "அதர்மம் அழிந்து தர்மம் வெல்லும்" - என
விடுதலைக் களமாடும் வேங்கைகளை சிறப்பித்த - நின்
வீரமிகு காதையின் முடிவுரையை நெருங்கிவிட்ட
தமிழீழக் காவியத்தின் அரங்கேற்றம் காணாமல்
மாரடைப்பு என்னும் மரணம் வந்ததேனய்யா!

மலரும் இலக்கியம் யாவும் தமிழீழப் பரணியாகணும் - என
மழைபோற் பொழிந்திட்ட நின்நாவன்மையும் ஓய்ந்திட்டதோ!
தமிழர் குருஷேத்திரக் கீதை வெளியீட்டில் கண்ணீர் மல்க - நீவிர்
பகன்ற வார்த்தைகள் கண்முன்னே நிழலாடுகின்றதே!
மைத்துனர் மகேந்திரனைக் குருவாகக் கொண்டு - தொடரும்
எழுத்துப்பணி யென்றாய் - நின்பணி தொடராமல்
பாதியிலே பறித்த படைத்தவனும் பாதகனே!
நல்லவரை தானழைக்கும் வஞ்சனைக்கும் முடிவேது!

முதற்பெயரை தவிக்கவிட்டு இறுதிப்பெயர் நீமுந்தியதால்
இருளடைந்த உன்இல்லத்தில் இருகுழவிகள்
ஒளியைத் தேட மனையாளவள் மனம் நிறைந்த
மணாளனைத் தேடி தேம்பியழும் சோகத்தினை
எழுத்தில் வடிக்க முடியவில்லையய்யா! உன்
எழுத்தாற்றலை வியந்து நின்று நின் கீதையினை
படித்து முடிக்குமுன்னே நின் முடிவுரைக்கு கவிவடிக்கும்
நிலையெண்ணி கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துகிறோம்

ஆதி அருள் நெறி மன்ற நீழலில் அமர்ந்தே
சைவமும் தமிழும் - மலரும் அதன் மணமும் என
ஆதி தமிழ் மகளுக்கு உழைத்திட்ட உத்தமரே!
உன் இழப்பால் தமிழ் மகளும் தடுமாறி நிற்கின்றாள்
வரலாற்று நாயகனை வாழும் காலத்திலே
காப்பியமாக்கிய நின் புதுமைமிகு சிந்தனைப் புரட்சியால்
உன் சரிதமும் தமிழர் வரலாற்றில் அழியாது
உனதாத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

திருமதி. வனிதா இராஜேந்திரம்

# என் நெஞ்சு நிறைந்தவனுக்கு

சிங்களத்தார் குருதியிலே செவ்வுடலை நனைத்துச்
சித்தரித்துத் தமிழ்ப்பாவை திலகமிடும் காலம்
வங்கநிலத் தோழருடன் எழுபது பேர் வந்து
வரம்பமைத்த பெருந்தீவு பிளவுபடும் காலம்
திங்களொடு கதிரவனும் தீம்புனலும் தீயும்
தென்மொழியும் அழியாது எனக்காட்டும் காலம்
பங்கமிலாத் தமிழீழம் பார்க்காமல் நீயும்
பாய்ந்தோடி எங்கே தான் போனாயோ நண்பா!

அகத்துறையும் புறப்பொருளும் அழகுறவே வகுத்து
அடைகாத்துக் கொண்டிருந்த அறியாமைக்
- காலம்
இகத்துறையை இழித்திங்கு எழுந்தவர்கள் எல்லாம்
இருமுழத்துத் துணியோடு இடர் செய்த காலம்
முகத்துதியை புகழ்ந்துரையை முழுமையுற நம்பி
முன்னோர்கள் சீரழிந்த காலமொரு காலம்
மகத்துவமாய்ப் போர் செய்து மண்மீட்ட மகிழ்வை
மானிடனே! மாமணியே! மறந்தெங்கு போனாய்?

குருமுதல்வன் பிதாமகனார் கூடிநிற்கும் சுற்றம்
குருத்தோலை போல்வீழக் குவிந்திருக்கும்
-உற்றார்
உருசிதைந்து பெருவெற்றி வேண்டாமென்
-கண்ணா
உறவினரைக் கொல்லேன்னென்று உரைத்த
-விசயற்கு
அருமுதல்வன் சொன்னஉப தேசமதன் பேரால்
பெருமுதியோர் சிறுவயதார் இடையினத்தார்
-எல்லாம்
புரியவொரு நூல்தந்த புலிநிலத்துப் புகழோய்!
போனதெங்கே இருதினத்தில் புத்தகமாய் வாழி!

பாடுபொருள் புலியிருக்கப் பலபொருட்கள் பாடிப்
பரவசத்துக் காட்டிடுவார் பாராமல் நீயும்
நாடு பொருள் கீதையிலே நாயகனை ஏற்றி
நமக்களித்த புதுக்கீதை நம்முடனே இருக்கும்
தேடுபொருள் தொலைந்ததுவோ தெய்வமென்ன
-தெய்வம்?
தேனமுதே? உன்னுடலை தீயடுக்கச் செய்தால்!
வீடு பெறு! வானுலகில்! வீரமிகும் நூலால்
வீறுபெறும் தமிழீழம்! வென்றிடுவார் புலிகள்!!

இனிய தோழமையுடன்
கே. பரமேஸ்வரன்
ஆசிரியர் - ஈழநாடு
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா மலையின் சரிவு

அ.சண்முகநாதன்
தலைவர், அனைத்துலக மனித கலாசார பேரவை

கால மகளின் காவியத்தலைவனாக திகழும் மேதகு பிரபாகரன் அவர்களை அவதார புருசனாக காட்டுவதோடு ஐயாயிரம் ஆண்டுகளாக அக்கினித் தேரிலே பறந்து கொண்டிருந்த அனுமன் கொடியை இறக்கி புலிக் கொடியை பறக்கவைத்து புரட்சிகர குருஷேத்திரக் கீதை என்கின்ற நூலை தந்த சிந்தனைச் சிற்பி சித்திரா மணாளன் அவர்கள் மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டார்.

இவரைப்போல ஈழத்தமிழினம் காலத்துக்கு காலம் அரிய இலக்கியவாதிகளைப் பெற்றது. ஆனால் சமகால இலக்கியவாதிகளில் இவரே முன்னிற்கிறார். ஏன் என்று நோக்க பல விடயங்களை முன்வைக்கலாம். இவற்றில் முதன்மையாக நிற்பது மிசிசாகாவில் உள்ள கோயிலில் உரையாற்றும் போதும் கூறினார் "கரும்புலிகளை நாம் வணங்கவேண்டும். அவர்களின் உருவங்களை இங்கு பிரதிஷ்டை செய்யவேண்டும்" என துணிவாக தன்கருத்தை வைத்தார். இக்கருத்தை பல மேடைகளிலும், தனது நூலிலும் வலியுறுத்தி வந்த ஒரு சிந்தனையாளர். இவருக்கும் எனக்கும் பள்ளிப் பராயத்துப் பழக்கம். இதனால் இவரின் செயற்பாடுகள் பற்றி இருபது வருடங்களுக்கு பின்னோக்கி பார்க்கிறேன்.

அப்போது மது ஒழிப்புப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த கால கட்டம் புங்குடுதீவில் மடத்துவெளி, ஊரதீவு கிராமங்களில் இப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துக் கொண்டிருந்த போது அதை நடைமுறைப்படுத்துவதில் சித்திரா மணாளன் அவர்களும் எம்மோடு இணைந்து பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம். எமது செயற்திட்டங்கள் மிகப் பெரிய வெற்றியைத் தந்தது. இன்றுவரை இந்தக் கிராமங்களில் மது ஒழிப்பு நடைமுறையில் உள்ளது. இந்த வெற்றிக்கு இவரும் ஒரு முக்கிய காரணம். அத்தோடு பதினைந்து வருடங்களுக்கு மேலாக வெளிநாடுகளில் வாழ்ந்தும் மதுவைத் தொடாது இறுதி வரை கொள்கைப் பற்றோடு வாழ்ந்த கொள்கைவாதி.

எமது கிராமத்தில் எந்த அபிவிருத்திப் பணியாக இருந்தாலும் அங்கே முன்னின்று அதை எவ்வாறு செய்யலாம் என அத்திட்டத்திற்கு ஓர் சிறந்த செயல் வடிவம் கொடுக்கும் ஒரு சமூக சீர்திருத்தவாதி இந்தச் சித்திரா மணாளன் அவர்கள்.

இவரது பேச்சிலே உறுதி தெரியும் ஆனாலும் யாரோடும் முரண்பட்டது இல்லை. ஒரு தாயின் அரவணைப் போடு ஊரிலும், கனடாவிலும் எம் இளைஞர்களை அரவணைத்து வழிகாட்டியவர்.

அறிமுகமில்லாத ஒருவர் தொலைபேசியில் அழைத்து "தமிழர் குருஷேத்திரக் கீதை எழுதும் நீ யார்? உனக்கும் விடுதலைக்கும் என்ன தொடர்பு எனக் கேட்டபோது இவர் " தம்பி நான் யார் என்பதைப் பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் எந்த அமைப்புக்கும் தொடர்பற்றவன். ஆனால் நான் விடுதலை விரும்பி. தமிழர் குருஷேத்திரக் கீதை என்ன சொல்கிறது. நான் எதைப்பற்றி எழுதுகிறேன் என்று பாருங்கள். பயனுள்ளதாக அமையும். நான் யார் என்று நீங்கள் பார்ப்பதில் எந்த பயனுமில்லை" என்று பதிலளித்தார். தன்னைவிட தன் கொள்கைகள், இலட்சியங்களை முதன்மைப் படுத்திய இவரை சுருங்கக் கூறுவதாயின் "விடுதலைக்காக எப்போதும் குரல் எழுப்பிய ஓர் ஈழத்தவன். தனது மக்களின் துயரங்களைத் துடைக்க விரும்பிய ஓர் தமிழன். நீதியான சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவன். ஒவ்வொரு மேடையிலும் கரும் புலிகள் வணக்கத்துக்கு உரியவர்களென வாதிட்டவன். சமய சமரசத்திலும், சமூக விடுதலையிலும், சகோதரத்திலும் நம்பிக்கை கொண்டவன்" எனலாம்

தனது எழுத்தாலும், பேச்சாலும் எம்மை எல்லாம் ஆகர்சித்த இவரின் மரணம் ஒரு பாரிய விருட்சம் சாய்ந்தது போன்றிருக்கிறது. இவர் இல்லாமல் வெறுமையுணர்வாகத் தோன்றினாலும் இவரின் இலட்சியப் பணியைத் தொடர இவரின் நினைவு என்றும் எம் கூடவே இருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோம். சாந்தி... சாந்தி....

உங்கள் உணவுத் தேவைகள்
எங்கள் சேவையில்......!
TUXEDO GROCERIES
EAST, WEST INDIAN & CANADIAN GROCERIES
FRISH & FROZEN FISH, MEAT & VEGETABLES
TEL: (416) 439-1299 TEL: (416) 289-6425

உ
ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராயநம:

சிவாகம கிரியாபீடம்
இந்துமதக் கிரியா சேவைகள்
சிவஸ்ரீ ச. ஸ்ரீதரக்குருக்கள்
(கண்ணன் குருக்கள்)
திருமணப்பதிவாளர்
5 Green Leaf Terr., Scarborough, Ont. M1B 4J6
TEL: (416) 724-7480
சேவைகள்: திருமணம், பதிவுத்திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, புண்ணியாக வாசனம், வீடு குடிபுகுதல், கடைத்திறப்பு விழா, விவாகப் பொருத்தம் பார்த்தல், ஜாதகக்குறிப்பு எழுதல் மற்றும் திருமணத்திற்குரிய அனைத்து ஒழுங்குகளும் செய்து தரப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்ரா மணாளன் ஓர் சித்திரமானான்

சித்திரை மாதத்தில் பலசித்திரம் காண்போம் நாம்
இத்தரை மீதினில் எமதொரு சித்திராமணாளனை கண்டோம்
பத்தரை மாற்றுத் தங்கம் அவன் பகுத்தறிவு எத்தரைக்கும் சென்றதே
முத்திரை பெற்றான் உலகினோர் அறிய அவன் முத்தியும் பெற்றானே.

இறப்பவர் சிலர் இங்கும் இருப்பது மெய்யெனின்
சித்ராமணாளன் போல் செதுக்கும் நல்ச் சிற்பிகள் ஆருமே
புத்தர் பலசித்தர்கள் பிறந்திறந்து காட்டியதும்
மெத்தச் சரியாகுமே இம்மானிலம் தந்தது இம் மகான்களை

சித்ரா மணாளனோர் சிந்தனைச் சிற்பியவன்
மனித குலத்திலுமென் மாயக் கிருஸ்ணன் பரம்பரையே
தனக்கென வாழ்ந்தோர் பலர் தன்னருகே சூழ்ந்தபோதும்
நமக்கெதற்கேன் இவ்வுலகம் எனத் தனை மறைத்தே வாழ்ந்து வந்தான்

கற்றது அவன் கடுகளவாகினும் நற்றமிழ் அவன் நாவில் மலிந்தனவே
உற்றார் உறவினரோடும் அவன் உண்மையே பேசி உணர வைப்பான்
நற்றாள் தொழும் நல்லவர் கூடியே நம் சிவனைக் கைகூப்பி வந்தான்
பெற்றாள் அவன் அன்னை பெரும் பேறும் பெற்ற தெய்வமன்றோ.

சித்திரம் என்பதும் பல விசித்திரமுடையதே
பவுத்திரம் பல பல கற்பனை பல்லோர்க்கும் படிந்ததே சித்திரம்
உத்தமன் ஊறி விட்டான் உலகமக்களின் மனத்திலே
மத்திமம் அவன் வயதில் மாறிவிட்டான் இம்மண்ணையும் விட்டுமே.

இறப்பது இயற்கையாயினும் இங்கும் இருப்பார்கள் அவருட்சிலர்
மறப்பதும் முடியுமோ இவனை மாமன்னன் ஆக்கியபின் கண்ணன்கீதை
சிறப்புறப் போரிட ஈழம் சிறந்த ஓவியம் தீட்டினான் இச்செம்மல்
கறுப்புடை அணிந்திட்ட எம்கரும்புலிகள் காலத்தவனன்றோ இக்காளை.

சித்திரம் தீட்டினான் அருட் செம்மலுமாகினான்
சித்திரம் போல் அவன் எம்மனதில் சித்தமாய் உறைந்திட்டான்
இத்துணைச் செயல் செய்த எம் தமிழீழ மைந்தனை
வைத்துளம் போற்றியே வாழ்த்துவோம் நம்வாழ்நாளில்.

அன்புத் தங்கையே அருமைக்குஞ்சரங்களே ஆருயிரம்மாமே
அன்புகோர்த்த உடம்பிது என்றும் நமக்குச் சொந்தமில்லையே
அன்பை ஊட்டி ஆசை தீர்த்தான் அவன் போகட்டும் நமக்குமே
குன்றக் குமரன் குலத்தவன் கொடுத்தவாக்கினை வணங்கி வாழுவீர்.

சி. க. நல்லையூரன்
புங்கையூர்
தமிழ் ஈழம்

# சிந்தனைச் சிற்பி சித்ராமணாளன்

"புங்கைநகர் பெற்ற செல்வன்
புதுக்கீதை தந்தோன்
மங்கை சித்திராவின் நற் பெயர் பூண்டோன்
எழுத்தாளன் சிந்தனைச் சிற்பி தமிழ் ஈழம்
எழ விரைந்து களம் சென்றான் இன்று"

மாவீரர் அழைத்தாரோ
மாமனிதன் அழைத்தாரோ
மேதகு தலைவர்தனை
மேன்மையாய் கீதை செய்தாய்
மாவீரர்கள் மகத்தான பிறவியென்றாய்
ஆலய பீடத்தில் அவர்கள்தான்
தெய்வமென்றாய்
போர் முறை தர்மத்தை
புதுக்கீதையில் விளக்கி நின்றாய்
அங்கம் ஒன்று அறிவித்து
வாரமொன்றில் எங்கு சென்றாய்
எழுந்துவர மாட்டாயோ?

வன்னி வயல் காட்டில்
வல்ல புலி வெல்லுமென்றாய்
கிளிநொச்சி கிடைத்த கதை
தெரிந்து தான் சென்றாயோ
ஆலயங்கள் தோறும்
ஆன்மீகம் உரைத்தாயே
ஆண்டவன் உரைகேட்க
அழைத்தானோ உனை அங்கு!

பட்டிமன்றம் எங்கும்
உன்குரல் பர்ணமிக்கும்
தீபம் - 98ல் பட்டி மன்றம் வந்து
பல கருத்தை முன்வைத்தீர்
அம்பிகையின் விழாதன்னில்
கீதவாணியில் நேருரைத்தீர்
எங்கு சென்றீர் இப்போ
எழுந்துவர மாட்டீரோ!

பொற்றாலி பூங்கொடியும்
பூத்த மலர் இரண்டும்
நற்றாளில் வீழ்ந்து அழ
ஈன்றமண் மைந்தர்கள்
சான்றோர் ஏங்கிநிற்க
தனிவழியே சென்றாயே
புதுத்தர்மம் உரைப்பதற்கு
நயினைத்தாய் உனக்கு
நற்சாந்தி தருகவென
அவள் பாதம் தொழுகின்றோம்.

நயினாதீவு அபிவிருத்தி ஒன்றியம் - கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்காவியம் உள்ளவரை
# உன் புகழ் வாழும்

அன்பிற்கு இலக்கணமாய்
பண்பிற்கு இருப்பிடமாய்
பாசத்திற்கு இணையற்றவனாய்
சொல்லிற்கு வேந்தனாய் திகழ்ந்தாயே!
எம் அன்புச் சகோதரனே!
எம்மண்ணின் மைந்தருக்கு
எமனிட்ட சாபக்கேடா!
புங்கைநகர் பெற்றெடுத்த புனித மைந்தனே!
ஒன்றா! இரண்டா!
அடுக்கடுக்காய் வரும் அறிவுத்தீபங்கள்
அணைக்கப்பட்ட அவிர்விளக்கானால்
எப்படித் தாங்குவோம் இத்துயர் தன்னை

சீதைக்கு மைந்தனாய்
சித்ராவின் மணாளனாய்
சீர்பெற்ற குழந்தைக்கு தந்தையாய் மட்டும் வாழ்ந்தாயா?
எம் மண்ணின் பெருமை சேர்க்க வந்தவனே!
தோன்றில் புகழொடு தோன்றுக என்பதிற்கு
இலக்கணமாய் திகழ்ந்தவனே!

உன் குரல் வளம் கேட்டு குளிர்ந்த மனங்கள்
உன் கனிந்த பார்வையும் குளிர்ந்தவுன் புன்னகையும்
கலைஞனாய்! கவிஞனாய்!
கருத்துக்கள் செறிந்த அறிஞனாய் வாழ்ந்தவனே

கருத்தினை தாய்நாட்டில் வைத்து விடிவை நோக்கி
காலம் காலமாய் காத்திருந்தவனே!
உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கென வாழ்ந்தவனே
உடனிருந்து உன்மண்ணில் போராட முடியாத நீ
உன்மனதில் மாவீரர் போர்க்களம் நிறுவி
தமிழ்த்தாயின் தனயர் தம்மை தரத்தினில் உயர்த்தி
தானைத் தலைவனை வாழ்த்தி நீயவருக்கு தாசனுமாகி
சூரியபகவானே எம்பிரபாகரன் என எடுத்தியம்பி
அரசபடையொரு கௌரவர் அதர்மமென
ஒப்பீடு செய்து ஒப்பற்ற காவியம் படைத்து
குருஷேத்திரக்கதைக்கோர் புத்துயிர் கொடுத்து
புதுக்கீதைதனை உன் எண்ணத்தில் வடித்து
உலகிற்கு உன் உயிரைப் பணயம் வைத்து
சிந்தனையில் வடித்த சிறப்புமலர் கீதையை அரங்கேற்றி
ஓர்மூன்றுதினம் ஆகும் முன்.....

சிந்தனைச் சிற்பியே! சித்திராமணாளனே!
எங்கள் சீரிய நண்பனே! எங்கள் ஸ்ரீ அண்ணாவே!
பூவரசம் பூநிழலினில் பூத்த புகழ் மகனே!
தமிழ்த்தாயின் மடியில் தவழ்ந்த தவமகனே!
புங்கைத்தாய் பெற்றெடுத்த நன்முத்தே!
பாணாவிடை ஐயனாரின் பக்தனே! - அவன்
பாதலர் சரணடைந்த பொன்மகனே!

நட்டாற்றில் விட்டுச் சென்ற கலமாக நாமிருந்து ஏங்க
பித்தாகி நாமெல்லாம் பிதற்றி நிற்க - புகழ்
வித்தாகி விட்டாயே! ஏன் அண்ணா ஏங்க வைத்தாய்!
உன் எண்ணத்தில் எழுந்தவை எத்தனை கோடி
பூவரசம் பொழுதிற்கு சக்தி வழிபாட்டில்
சரித்திரம் காணத்துடித்தாய்
வெற்றிச் சங்கும் ஊதி வீர முழக்கமிட்டு
வீரவேங்கைகளை மனக் களத்தினிலே கண்டாய்!

காவியநாயகன் புகழ்பாடி காவியம் படைத்தாய்
அத்தியாயம் இரண்டு முடியும் முன்
எம்மை விட்டுச் சென்றாய்....
மாவீரர் யாரென்றால்....
மரணத்தை வென்றவர்கள்!
ஊர்வாழ வேண்டுமென்ற
உள் எண்ணம் கொண்டவர்கள்!
உன் காவியம் வாழும்வரை
கலைஞனே! நீ வாழ்வாய்
உன் புகழ் வாழும்.

உன் ஆத்ம சாந்திக்காக இறைவன் பாதம்
பணிந்து எங்கள் கண்ணீர் பூக்களை
சமர்ப்பணம் செய்கின்றோம்.

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்
கனடா கிளை

SANTHA
தமிழர் மத்தியில் நம்பிக்கையான நிறுவனம்
Electrical - Plumbing - Appliance & Drainage Services
Electrical Wiring
Dish Washer, Dryer, Stove
Drainage Service
Basement Finishing
24Hrs Emergency Service
Painting
Plastering
Plumbing
Plumbing Repair
Santha
Tel: (416) 297-1741
Cel: (416) 200-5470
Lingam
Tel: (416) 292-4335
24Hrs. Emergency Service - Pager (416) 600-3724

உ
ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா
திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் இந்து மத கிரியைகள் சேவை
சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்
(புங்குடுதீவு - 10 இலங்கை)
மணவறை, பூமாலை, சடைநாகம், தலைநகை செற்,
தலைப்பாகை, மண்டப அலங்காரம்,
சைவ உணவுச் சேவை முதலியன
5576 Cortina Crescent
Mississauga, ON
L4Z 3R2
TEL: (905) 501-0011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவாழ் ஈழத் தமிழர்களே

## மாவீரர் வாரத்தைச் சந்திக்கத் தயாராகுங்கள்



உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆகிய எதிர்காலச் சந்ததியினா் சுதந்திரமாக வாழவும், தன்னாதிக்கம் மிக்க சுயாட்சியில் சுதந்திரத் தமிழீழம் பிறப்பதற்காக

**தமது உயிரை ஆயுதமாகப் பாவித்து உயிர்க் கொடை கொடுத்தவர்கள் மாவீரர்கள்**

அந்த அதி உன்னத மனிதர்கள் தமது உயிரிலும் நேசித்தது சுதந்திர தமிழ் ஈழத்தையே

அந்த தமிழ்ஈழ விடுதலைக்காகப் போராடும் ஈழத்தமிழ் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் உணவு செல்ல விடாது சந்திரிகா அரசு தடுத்து வருகிறது. உணவை ஒர் ஆயுதமாகப் பயன்படுத்தல் மனிதாபிமானமற்ற செயல். இத்தடைகளை உடைத் தெறிய ஈழத் தமிழ் மக்களுக்கு பெரும் தடையாக இருப்பது பணம்

ஆகவே கனடாவாழ் தமிழ் மக்களே நீங்கள் தமிழ் ஈழம்காண உங்களின் ஒரு பகுதி பணத்தை கொடையாகக் கொடுங்கள். தற்கொடைகளோடு நன்கொடைகளும் தேவைப்படும் நேரம் இது.

# மாவீரர்கள் உயிரைக் கொடுத்தார்கள்

## கனடா வாழ் தமிழர்களே பணத்தைக் கொடுங்கள்

"டாக்டர் ஆதி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை உருக்கும் செய்தி ....!
# எழுத்தாளர் சித்ரா மணாளனின் மரணச் செய்தி

கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்

உலகில் இன்று நிமிடக்கணக்கில் மனிதர் இறக்கின்றார்கள், பிறக்கின்றார்கள். ஆனால் அவர்கள் பற்றி எவரும் கவனம் செலுத்துவதில்லை. ஆனால் சிலருடைய மரணம் அவரைப்பற்றி சிந்திக்க வைக்கின்றது மட்டுமல்ல அவரின் சேவைகள், பற்றி சொல்லவும் எழுதவும் வைக்கின்றது. இந்த நிலையில்தான் தாய்மண்ணில் ஏற்பட்ட நிற்பந்த சூழ்நிலையால் நம்மோடு அகதியாகி மண்ணையும், மக்களையும், சொந்த பந்தங்களையும், ஊரவர்களையும், பிரிந்து வந்த சோகத்தில் ஒதுங்கி வாழ நினைத்தாலும், இன உணர்வும், தாய்மண் பற்றும், தமிழின் தாகமும், கொண்ட நல்லவர்களால், வல்லவர்களால் அப்படி வாழ முடிவதில்லை.

இந்த வரிசையில் தன்னை இனம் காட்டிக் கொண்டவர்தான். புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் உறுப்பினரும் சமூகசேவையாளரும் மேடைப் பேச்சாளனுமான, சிறிஸ்கந்தராசா அவர்கள். புலம்பெயர் மண்ணில் தன்னின மக்களின் விடிவுக்காய் பணிதொடர கால்பதிக்கையில், தான் கரம்பற்றிய தன் மனைவி சித்ராவின் பெயரை தன்னோடு இணைத்து சித்ராமணாளன் என்ற புனைப்பெயரோடு ஆரம்ப புலம்பெயர் மண்ணில் தன்பணி தொடர்ந்தார். தான் வாழ்ந்த பகுதி மக்களிடையே குன்றி இருந்த ஒற்றுமையை, தமிழ் உணர்வை, கலை உணர்வை, தட்டிக்கொடுத்து வளர்த்தெடுக்க எண்ணி அப்பகுதி மக்களை ஒன்றுதிரட்டி அவர்களிடத்தே ஒரு அமைப்பாக தமிழர் கலாச்சார கலையகம் என்ற பெயரோடு பொது அமைப்பை உருவாக்கி அதன் செயலாளராகவும் பணியாற்றினார். அவரிடம் குடிகொண்டிருந்த திறமையின் காரணத்தால் மிகக் குறுகிய கால எல்லைக்குள் தன் திறமைகளை இனம்காட்டி மக்கள் மத்தியல் திறமையுள்ள ஒரு எழுத்தாளனாக, நாடகக் கலைஞானக, வில்லிசைக் கலைஞனாக வீரம்மிகு மேடைப்பேச்சாளனாக புகழ்பெற்று உயர்ந்து நின்றார்.

அதுமட்டுமல்லாது ஒரு காலகட்டத்தில் இந்து மதத்தை அள்ளிச்செல்லுமோ...!? என்ற பயத்தை ஏற்படுத்திய சூறாவளி புயல்காற்றாய் வீசிய மதமாற்றம் என்ற புயலைத்தடுக்க எண்ணி தனிமனிதனாக மெய்ஞானக்குரல் என்ற சஞ்சிகையை வெளியீடு செய்து இந்துக்கள் மத்தியில் பெருமதிப்பும் மற்றவர் மத்தியில் எதிர்ப்பை எதிர்கொண்டாலும் தன்பாதையில் துணிந்து சென்றார். உடல்நலக்குறைவுகள் இடை இடை ஏற்பட்டாலும், தயங்காது தன் இலட்சிய பாதையில் துணிவோடு பயணித்தார்.

இந்தச் சூழலில் இன்று புலம்பெயர் தமிழர்களை பிடித்தாட்டும் நிரந்தரமற்ற மனநிலை இவரையும் பிடித்து உலுக்கியது. கட்டிய மனைவி கடிவாளத்தை சுண்டி இழுத்தும் கேட்டாரில்லை. கனடாவில் சென்று குடியேறினார். அங்கும் அவர் தன் தமிழ்ப் பணியை, மதப்பணியை தொடர்ந்த போதும்..... நோய் என்ற அரக்கன் அவரைத் துரத்தியது. அந்த நேரத்திலும் அவரின் இதயத்ததில் தாய்மண்ணின் மணமும் அங்குவாழும் மக்களின் துயரும், அரக்கர் ஆட்சியின் உணவு, மருந்து, தடையும். அதனால் மக்களுக்கேற்பட்ட பட்டினிச்சாவும் என்ற செய்திகள் அவரை மிகவும் பாதித்தது. அந்த உணர்வுகளின் மேலீட்டால் தன் இதயக் குமுறலை வெளிக்காட்ட தமிழர்களுக்கு இன்றைய தமிழீழப்போரின் தன்மையை, நோக்கத்தை, உணரவைக்கும் நோக்குடன் தமிழர் குருஷேத்திரக்கீதை என்ற நூலை 26-10-98ல் கனடாவில் வெளியீடு செய்து, அங்குள்ள பல எழுத்தாளர்களின், அறிஞர்களின், உச்சக்கட்ட பாராட்டையும் வாழ்த்தையும் பெற்று தன் கடமையில் திருப்திகொள்ளும் நேரத்தில், 30-10-98 தன் அருமை மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் தவிக்கவிட்டு நெஞ்சுவலியாய் எமனை அனுப்பி இறைவன் அழைத்தானே! தன்பணிக்காக என்ற செய்தி எங்கள் நெஞ்சை உளிகொண்டுடைத்த செய்தி. அவரின் பிரிவால் துயருறும். அவரின்மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், அனைவற்கும் ஆழ்ந்த அனுதாபத்தை கூறுவதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகின்றோம்.

சாந்தி, சாந்தி, சாந்தி, சாந்தி

வாசித்துவிட்டீர்களா?
இவ்வார
உலகத்தமிழர்
சர்வதேச தமிழர் பத்திரிகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CLUB MAX
## T O U R I S T

**MONTREAL TO TORONTO**
Montreal (514) 389-8093

**TORONTO TO MONTREAL**
**Kennedy & Finch**
Toronto (416) 281-8005
(416) 609-2542



உல்லாசப்பயணங்கள், சுற்றுலாக்கள், கொண்டாட்டங்கள்
கனடா, வட அமெரிக்கா
நகரங்களுக்கு பாதுகாப்பான அவதானமிக்க
சாரதிகளுடன் சேவை வழங்குகின்றோம்.


விமான நிலையங்களுக்கும் சேவை
ரொறன்ரோ. மொன்றியல் ஆலயங்களுக்கும் விசேட ஏற்பாடு
சிறு பொதிகள், வர்த்தகப் பொதிகள் நம்பிக்கையாக ஒப்படைப்போம்
வீட்டுப்பொருட்கள், தளபாடங்கள், தொகையான பொருட்களுக்கு விசேட ஒழுங்கு
பிரயாணச் சீட்டுக்கள் குறைந்த விலைக்கு தெரிவு செய்து வழங்கப்படும்

தங்குமிட வசதிகள்
குறைந்த
கட்டணத்தில்

Montreal, Quebec City, Niagara, Pittsburg
நகரங்களுக்கு
குறைந்த கட்டணத்தில் சேவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்காபரோ
# பல்வைத்திய நிலையம்




***Your Orthodontic & Endodontic Centre***

பிரபல பல் வைத்திய நிபுணர்

## டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம்

**FOR COMPLETE DENTAL CARE**

# 416-750-9969

**2155 Lawrence Ave. East, Suite 11, Scarborough, Ont.**
**(Birchmount & Lawrence)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org